# தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்



கரந்தைக் கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

## நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ்

துணர் : 60 மலர் 11

## உள்ளுறை


1. சிந்தையுள் ஒளிரும்
செந்தமிழ்ச் செம்மல் ... 481

பதிப்பாசிரியர்

2. 'கரந்தைக் கவியரசு,
அரங்க. வேங்கடாசலம் பிள்ளை
வாழ்வும் பணியும் .... 484

முனைவர் சி. வேங்கடபதி, எம் ஏ., பி எச். டி.,
துணைப் பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

3. கவியரசின் கவிதைகள் ... 498

4. நமது பொழில் .... 501

5. தமிழிற் பிறமொழிக் கலப்பு .... 506

6. தொல்காப்பியம் : சொல்லதிகாரம் :
பேராசிரியருரை .... 514

7. நற்றாயும் செவிலித்தாயும் .... 525

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2018

துணர்: 60 அட்சய — மாசி மலர் : 11

பிப்ரவரி — மார்ச் 1987


# கவியரசு நினைவு இதழ்

## சிந்தையுள் ஒளிரும் செந்தமிழ்ச் செம்மல்

கரந்தைத் தமிழ்ச்சங்கம் என்னும் தண்டமிழ்க் கழனியில் வண்டமிழ்ப்பயிர் வளர உணர்வானும் உரையானும் உடலானும் முயன்றுழைத்த சொல்லேருழவருள் நினைவில் உறையும் நிறை தமிழ்ச் சான்றோராய் உயர்வரியில் நிற்பவர் நம் கரந்தைக் கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை என்னும் அருந்தமிழ்ப் பாவலர்.

தொடிப்புழுதி கஃசா உழக்கி வரம்பமைத்து உணர்வு நீர்பாய்ச்சிப் பிறமொழிச் சொற்களாம் இளங்களைகட்டு ஈகத்தை வித்தித் தூய தமிழ்ப்பயிரை விளைக்க ஓயாமல் உழைத்துத் தாயாகிப் புரந்த தமிழவேள் த. வே. உமாமகேசுவரனாரின்

உள்ளத்தாற் பிணிப்புண்டு அவருக்கு உறுதுணையாகிச் செல்லல் கருதாது நல்லாற்றான் நாடித் தமிழ்ப் பயிர்வளர்த்து உயிர்ப்பொடு பொங்கற் சமைத்துப் புலவமுதூட்டிய வேளாளர் நம் வேங்கடாசலனார்.

சங்கம் வளரத் துணைநின்ற சான்றோர்தம் தோள் பிணைத்துத் தொடக்க காலத்தெய்திய துயரெலாந்தாங்கித் தமிழ் வளர்த்த தகவாளர் நம் கரந்தைக் கவியரசர். பல்லாண்டுகள் தமிழ்ச் சங்க அமைச்சராயும் தண்டமிழ் இதழாகிய தமிழ்ப்பொழிலின் முதற் பொழிற்றொண்டராயும் கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வராயும் பேராசிரியராயும் பொருந்தியிருந்து அருந்தொண்டாற்றிய அண்ணல் அரங்க. வேங்கடாசலனார்.

தமிழ்ச்சங்கப் பெருவிழாக்களிற் கலந்துகொள்ள வரும் வள்ளியோர் வண்டமிழ் நாவலர் பாவலர் காவலர் யாவர்க்கும் செஞ்சொற் றொடைமாலை சூட்டி வரவேற்று அவர்தம் நெஞ்சங்களிப்ப நிறைகடனாற்றிய குறையிலாக் கவிஞர் நம் கவியரசு.

நாவலர் நாட்டார் துணையொடு வேட்டார் உவக்க நெடுந் தொகைக்குப் பொருள் வரைந்த உரையாசிரியர், மேகலையையும் சிலப்பையும் மேடையிற்காண நாடகமாக்கியளித்த படைப்பாசிரியர், தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குத் தெய்வச்சிலையார் செய்து வைத்த உரையினை ஆய்ந்தமைத்து வெளியிட்ட பதிப்பாசிரியர், எம்மனோர்க்கு இயற்றமிழ் முதலாப் பன்னூல் பயிற்றிய பேராசிரியர், நுண்ணிய நூற்பொருளை எண்ணி வியக்கும் வண்ணம் தெளிவூட்டுங் கதைகளான் எளிதாக்கி நகைச்சுவை ததும்ப நல்கி மகிழும் நல்லாசிரியர், நடைபயில இயலாத நிலையிலும் செந்தமிழ்த் தீந் தொடைபயிற்ற அயராத தூயவர் நம் கவியரசர்.

எண்ணிய கருத்தினை எழிலார்ந்த கற்பனை நயத்தொடு தொடையலங்கபழுப் டல்வகைப் பாவானும் படைத்தளிக்கும் மல்லல் சான்ற நல்லிசைப்புலவர். கண்ணென உயிரெனக் கன்னித்தமிழை வண்ணமுற வளர்த்த தண்ணளியாளர். இனிமை எளிமை பொறை நிறையாகிய பண்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்த செந்தமிழ்ச் செம்மல்.

மோகனூர்த் தமிழ்ப்பண்டிதர் என முத்தமிழ் சான்ற முதுபெரும் புலவோரான் போற்றப் பெற்றவர் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்தம் கெழுதகை நண்பர், பழுதிலா அன்பர். பண்டிதமணி,

மறைமலையடிகள், உ. வே. சாமிநாதஐயர் போன்ற பெரும்புலவர் களான் மதிக்கப்பெற்ற மாண்புடைய இப்பெருமகனாரின் நூற்றாண்டு நிறைவு நாளினைக் கரந்தைத் தமிழ்ச்சங்கம் 2–1–'87 அன்று பெருவிழாவமைத்துப் போற்றி நன்றி செலுத்தியது, பாராட்டிப் பரவியது.

அவர் தம் நிலையாய நினைவுச் சின்னமாக அவர் முதலாசிரிய ராக அமர்ந்து பொலிவுறச் செய்த தமிழ்ப் பொழிலின் அட்சய ஆண்டு மாசித் திங்களிதழ் அவர்தம் நூற்றாண்டு விழாச் சிறப்பிதழாக வெளியிடப் பெறுகின்றது. இவ்விதழுள் கரந்தைக் கவியரசின் வாழ்க்கை வரலாறு, ஆற்றிய பணிகள், அருந்தமிழ்த் தொண்டு, அவர்தம் பண்பு நலன் முதலியவை சுருக்கமாகக் கூறப் பெற்றுள்ளன. அவர் எழுதிய கட்டுரை கவிதைகளுள் சில தரப் பெற்றுள்ளன. பொழிலன்பர்களும் தமிழன்பர்களும் போற்றிக் கொள்வார்களாக

இதன் வாயிலாகக் கவியரசுக்குக் கரந்தைத் தமிழ்ச்சங்கம் தனது நன்றியையும் வணக்கத்தையும் செலுத்தி அவர் நினைவைப் போற்றுகின்றது. இம்மலர் செப்பமுற அமையத் துணைபுரிந்த தமிழ்ச்சங்க ஆட்சிக்குழுவினர்க்கும் கரந்தைப்புலவர் கல்லூரி முதல்வர், பேராசிரியர் முதலானோர்க்கும் பொழிலாசிரியர்குழுவின் சார்பாக நன்றி செலுத்துகின்றேன். வணக்கம்.

வாழ்க கரந்தைக் கவியரசர் புகழ்
வளர்க தமிழ்ப் பணி.

பதிப்பாசிரியர்.

# 'கரந்தைக் கவியரசு, அரங்க. வேங்கடாசலம் பிள்ளை வாழ்வும் பணியும்

முனைவர் சி. வேங்கடபதி, எம். ஏ., பி எச். டி.,
துணைப் பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி,
தஞ்சாவூர்.

'தமிழவேள்' த. வே. உமாமகேசுவரனார் தலைமையேற்று வழி நடத்திய கரந்தைத் தமிழ்ச்சங்கத்தால் தஞ்சைக் கருந்திட்டைக் குடி பெருமைபெற்றது. அத்தகு தமிழ்ச்சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி, பணிகள் மற்றும் பெருமை ஆகிய நிலைகள் யாவற்றிலும் நேர்முகத் தொடர்பு கொண்டு பெருமைபெற்ற பெருந்தகையாகத் திகழ்ந்தவர் நம் 'கரந்தைக் கவியரசு' அரங்க. வேங்கடாசலம் பிள்ளை ஆவார்.

## தோற்றம்

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை எனப்படும் கண்டர்கோட்டைக்குக் கிழக்கில் அமைந்துள்ள மோகனூர் என்னும் சிற்றூரில் விய ஆண்டு மார்கழித் திங்கள் ஐந்தாம் நாள் (18-12-1886) அரங்கசாமிப்பிள்ளை — தருமாம்பாள் ஆகிய பெருமக்களுக்கு முதல் பிள்ளையாக வேங்கடாசலனார் தோன்றினார்.

## இளமைக்காலம்

கல்வியை வளமாகப் பெறவேண்டும் என்னும் வேட்கையில் திளைத்த வேங்கடாசலனார், தஞ்சைத் தூய பேதுரு கல்வி நிலையத்தில் சேர்ந்து பயின்றார். 'சங்கம் நிறுவிய துங்கன்' எனப் பெயர்கொண்ட த வே. இராதாகிருட்டினப் பிள்ளையும் சிவ. தட்சணாமூர்த்தி பிள்ளையும் அப்பொழுது வேங்கடாசல னாரின் ஒருசாலை மாணாக்கர்களாகத் திகழ்ந்தார்கள்.

கல்வியைத் தொடர்ந்து ஆழ்ந்து பயில இயலாத இடையூறு இளமையிலேயே வேங்கடாசலனாருக்கு எய்தியது. தந்தையார் அரங்கசாமிப் பிள்ளையின் மறைவு, மூத்த பிள்ளையான வேங்கடாசலனாரை மோகனூரில் இறைகொளச் செய்தது

முழுமுதல் தொலைந்த கோளி யாலத்துக்
கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழுவும்

இயல்புடைய சான்றோராகிய வேங்கடாசலனார் வழிவழித் தம் குடும்ப வாழ்விற்கு உதவி வந்த உழவுத் தொழிலைக் கவனித்துக் கொண்டு, மற்ற பொறுப்புக்களையும் துணிந்து ஏற்றார். உடன் பிறப்புக்களான ஆதிமூலம், மாணிக்கம் ஆகியோருக்கு உற்ற பெருந்துணையாகவும் வேங்கடாசலனார் திகழ்ந்து 'குடிபுரக்கும்' சீரிய மாந்தராக விளங்கினார். மேலும் அவர் கணக்கப்பிள்ளை யாகவும் சிலகாலம் மணியக்காரராகவும் இருந்து அவர் ஊர்த் தொண்டும் மிக உவந்து செய்து வந்தார். இங்ஙனம் தொழிலும் உறைவிடமும் 'மோகனூர்' என்று ஆகிவிட்ட நிலையிலும் வேங்கடாசலனார் கல்வி மேவிய தஞ்சையை மறக்கவில்லை. கிழமைதோறும் தஞ்சைக்கு மிதிவண்டியில் வந்து மேன்மேலும் கல்விநலம் பெற்று வந்தார்.

## தமிழ்க் கல்வியில் தனிப்பற்று

தமிழில் தனி ஆர்வம் காட்டிய வேங்கடாசலனார் கரந்தைத் தமிழ்ப் புலவர் வேங்கடராமப்பிள்ளையிடமும் தஞ்சைத் தூய பேதுரு கல்லூரித் தமிழாசிரியர் 'குயிலையா' என்று அழைக்கப் பெற்ற, சுப்பிரமணிய ஐயரிடமும் தமிழ் பயின்று தேர்ந்த தமிழ்க் கல்வி தழுவியவர் ஆயினார். மேலும், கண்டர்கோட்டைக் காவல்துறை ஆய்வாளராக இருந்த 'இலக்கணம்' மா. ந. சோமசுந்தரம் பிள்ளையோடு தொடர்புகொண்டு இலக்கணத் துறையில் வல்லுநராகவும் வளர்ச்சியுற்றார். இத்தகு தமிழ்ப் பயில்வுகள் வேங்கடாசலனாரைப் பழந்தமிழில் ஈடுபாடும் சான்றோர் தகுதிப்பாடும் பெறச்செய்தன. இங்ஙனம் பலரிடமும் பெற்ற பழந்தமிழ்த் திறங்களை மோகனூர் அரசமரத்தடியில் இருந்து மேன்மேலும் வளர்த்துத் தமிழ் வித்தகரானார் வேங்கடாசலனார். தமிழில் பாட்டியற்றும் ஆற்றல் பெருக வரப்பெற்றுப் படைப்புச் சீர்மையும் எய்தினார்.

## ஆசிரியர் பணி

பயிற்சியாலும் தம் அளப்பரிய முயற்சியாலும் எய்திய தமிழாற்றலாலும் தமிழ் பரப்பும் நோக்கத்தில் ஆசிரியப் பணியை வேங்கடாசலனார் ஏற்றார். கோனாப்பட்டு என வழங்கப் பெறும் 'கோனார் பற்று' என்னும் ஊரிலமைந்த கல்வி நிலையத்தில் தமிழாசிரியராக அவர் முதலில் பணி புரிந்தார்.

கோனார் பற்று, பாரிவள்ளல் ஆண்ட பறம்புப் பகுதிக்கு அண்மையில் இருந்ததால் அங்குப் பணியாற்றிய வேங்கடாசலனாருக்குப் 'பண்டிதமணி' மு. கதிரேசன் செட்டியாரின்

நட்பு வாய்த்தது. அதனோடு சேர்ந்து மேலைச்சிவபுரி 'சன்மார்க்க சபை' யின் தொடர்பும் கிட்டியது. அதனால் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், மகாவித்துவான் ரா. ராகவையங்கார், சோழவந்தான் அரசஞ் சண்முகனார், பெரும்புலவர் அனந்தராம ஐயர் ஆகியோரின் நட்பும் பழக்கமும் வேங்கடாசலனாருக்குக் கிட்டின.

இலக்கண இலக்கியங்களைப் பயிற்றுவித்த பான்மையினாலும், நகைநலம் கெழுமச் சொற்பொழிவாற்றுந் திறத்தினாலும் வேங்கடாசலனாரின் புலமையும் பெருமையும் சிறந்து வளர்ந்தன.

## குடும்ப வாழ்வு

வேங்கடாசலனார் உரிய பருவத்தில் மங்களத்தம்மை என்பவரை மணந்து இல்லறம் இயற்றினார். இவர்கட்குச் சுப்பிரமணியம் என்னும் மைந்தர் பிறந்தார். பெற்றோரின் ஆருயிர்ப் பெரும்பேறாகத் திகழ்ந்த சுப்பிரமணியம் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து வளர்ந்து பெற்றோருக்குப் பெரு மகிழ்வளித்துச் சிறந்திருந்தார். அந்நிலையில் இளமைக் காலத் திலேயே மங்களத்தம்மையார் இயற்கை எய்தியதால், துணையின்றி யிருந்த வேங்கடாசலனார் செகதாம்பாள் என்பவரை மணம் செய்து கொண்டார்.

## தஞ்சையில் தமிழ்ப் பணி

சொந்த வாழ்க்கையில் துன்பங்கள் தொடர்ந்து வாட்டிய போதிலும் வேங்கடாசலனார் தமிழ்ப்பணியை மறக்கவில்லை. அவருடைய தமிழ்ப்பணி மேலும் செழிப்புறும் வகையில், அவர் கல்வி பயின்று தஞ்சைத் தூய பேதுரு உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றும் பொறுப்பு வந்து எய்தியது.

இப்பணியேற்பு, அவர் வாழ்க்கையில் புகழ்ச்செல்வம் பெருக வாய்ப்பாயிற்று. திருவள்ளுவராண்டு 1942 வைகாசித் திங்கள் முதல் நாள் (14-5-1911) நம் 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர்களுள் வேங்கடாசலனார் ஒருவராவார். சங்கம் 1922இல் கல்வி நிலையம் தொடங்கியபோது, அதன் வளர்ச்சிக்கும் அவர் காரணராக இருந்தார். அப்போது நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், தஞ்சை உலகநாத பிள்ளை ஆகியோர் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது.

## தொல்காப்பியம் - தெய்வச்சிலையார் உரை முதற்பதிப்பாளர்

வேங்கடாசலனார் அவர்கள் தூய பேதுரு உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியபோது தெய்வச்சிலையார் உரையைப் பதிப்பிக்கும் பணியை மேற்கொண்டார். தொல்காப்பிய நூற்பாக்களையும் அவற்றிற்கு வேங்கடாசலனார் எழுதிய குறிப்புரை விளக்கங்களையும் படியெடுக்கும் பொறுப்பினைத் தமிழ்ச்சங்கக் கல்வி நிலைய ஆசான் ஒளவை சு. துரைசாமி அவர்கள் ஏற்றார்.

தெய்வச்சிலையார் உரையின் மேன்மையை ஒளவை துரைசாமியின் வாயிலாகக் கேட்டறிந்த 'தமிழவேள்' உமாமகேசுவரனார் அவர்கள், அந்நூலைத் தமிழ்ச்சங்க வெளியீடாக 1929 ஆம் ஆண்டு அச்சேற்றி வெளியிட்டார்கள். அந்நூலின் முன்னுரையில் பதிப்பாளர் என்னும் முறையில் வேங்கடாசலனார் வரைந்துள்ள கருத்துக்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. தொல்காப்பிய உரையாசிரியர்களைப் பற்றிய பொதுப்பார்வை, ஏடுகளிலிருந்து பழந்தமிழ்ச் செல்வங்களை அச்சுவடிவாக்கும் செப்பமுறை பற்றிய நுண்பார்வை-இவற்றோடு, தெய்வச்சிலையார் உரையைப் பதிப்பிக்க முன்வந்த இன்றியமையாமை ஆகியன பற்றி அவர் தெளிவுபடுத்தியிருப்பது அறிந்து போற்றுதற்குரிய ஒன்றாகும்.

"பண்டைத் தமிழ்நூல் ஏடுகளை அச்சிடுவதென்பது எளிய வேலையன்று. ஆழ்ந்தகன்ற பயிற்சியும் கூர்ந்து கூர்ந்து செல்லும் மதி நுட்பமும் ஏட்டுச் சுவடியிற் பன்னெடுங்காலப் பழக்கமும் சிறந்த பயிற்சியுடையார் துணையும் உடையாரே பண்டைத் தமிழ் நூலேடுகளை அச்சிடற்குரியார்... பண்டைநூற் பதிப்பிற்குச் செயத்தகும் முன்வேலைகள் பின்வேலைகள் பலப்பலவாகும். ஆயினும் உடன் அச்சிட வேண்டும் இன்றியமையாமை நோக்கியே, குற்றறிவும் குறும்பயிற்சியும் பெரும் மறதியும் மிகு சோர்வும் பிற குறைபாடுகளும் கொண்ட யான் ... ஏதோ இயன்றவகையில் ஒருவாறு அச்சிட்டு முடித்தேன். இதன்கண் பல்வகையான பிழைகளும் மலிந்திருத்தல் கூடுமென யான் உணரேனல்லேன்; உணர்ந்தஞ்சேனல்லேன்; அஞ்சி அஞ்சியும் அச்சிட்டது, ஒன்றே ஒன்றைக் கருதியதாகும். அஃதாவது, இதில் என் மனமாரச் செய்த ஆக்கல், அழித்தல், திரித்தல் முதலாய செய்கைகள் இலவாகலின், நாளும் நாளும்

பழுதுபட்டொழிந்துவரும் இவ்வேட்டின் ஒரு நேர் பிரதியாக இது நின்று, பிற்காலத்து அச்சிடும் பெரியார்கட்கு ஒருவாறு உதவி செய்யும் என்று எண்ணியதொன்றேயாகும்''.

இங்ஙனம் முதல் உரைப்பதிப்பில் வேங்கடாசலனார் மிக்க பணிவோடு வெளியிட்டுள்ள கருத்துக்கள் பதிப்புப்பாதையில் போற்றற்குரிய செப்பங்களைக் காட்டுகின்றன. அந்நூலின் அருமை பெருமை கருதித் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் 1984 இல் நிழற்படப் பதிப்பாக அதனை வெளிப்படுத்தியுள்ளது.

## தமிழ்ச் சங்க முதல் அமைச்சர்

பத்தாண்டுகள் தூய பேதுரு உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றி வந்தபோதே சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தார். சங்கத் தலைவராகத் தமிழவேள் உமாமகேசுவரனார் திகழ, அவருக்குத் துணையாக அரங்க. வேங்கடாசலனார் அமைச்சராகச் செயலாற்றினார். சங்கந் தோன்றிய நாள்முதல் கி. பி. 1940 வரை ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் கவியரசு அவர்கள் சங்க அமைச்சராக இருந்து சிறந்த பணி செய்துள்ளார்கள்.

## முதற் பொழிற் றொண்டர்

வேங்கடாசலனார் அமைச்சர் பொறுப்பில் இருந்தபோது, தமிழ்ச் சங்கச் சார்பில் 'தமிழ்ப்பொழில்' என்னும் திங்கள் வெளியீடு தோன்றியது. கி. பி. 1925ஆம் ஆண்டு குரோதன - சித்திரைத் திங்களில் 'இதழாசிரியர்' அரங்க. வேங்கடாசலம் பிள்ளையின் அறிமுகத்தோடு முதல் இதழ் (துணர் : க, மலர் : க) வெளிவந்தது.

"பொழிலின் பொற்பினை விழையாதார் இவ்வுலகத்து யாவர் உளர்? தனது பசுநிறத்தால், வண்டொலியால், தீங்கனியால், மலர்மணத்தால், பைம்புற்றரையால்-கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் பேரன்பினைத் தன்பால் எய்தும் எத்திறத்தோர்க்கும் எஞ்ஞான்றும் தரவல்லது பொழில் ஒன்றேயன்றோ! பொழிலின் எழிலினை உணர்ந்தன்றே, நமது முன்னைப் பெரியார்கள் நமது நாட்டினைப் பொழில் எனக்கூறி மகிழ்வாராயினர். எனவே இங்ஙனம் ஒப்பும் உயர்வும் இல்லாச்சிறப்பின தாய பொழிலின் பொற்பினையுணர்ந்தே இந்தத் திங்களிதழிற்குத் தமிழ்ப்பொழில் எனப் பெயரிட்டனம்'' என்று அதன் பெயர்க் காரணத்தைப் பொழிற்றொண்டர் வேங்கடாசலனார் முதலிதழில் விளக்கியுள்ளார்.

''தமிழ்ப்பொழில்'' இதழின் நோக்கத்தையும் 'நமது பொழில்' என்னும் அத்தொடக்கப் பகுதியிலேயே அவர் வெளிப்படுத்தியுள்ளார். ''இவ்விதழ் தமிழ்ச் சங்கத்தின் ஒரு வெளியீடு எனும் தகுதிக்கேற்பத் தமிழ் வளர்ச்சியும் தமிழர் மேம்பாடும் பற்றிய அருமைக் கட்டுரைகளையே தன்னகத்துக் கொண்டு வெளிவரும். தமிழ்மொழி வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ்ச் சொல்லாக்கம், தமிழ் நூலாராய்ச்சி, பழந்தமிழ்நூல் வெளியீடு, அரிய நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு, தமிழ்த் தனிச்செய்யுட்கள் வெளியீடு, தமிழ்நூல் மதிப்புரை, தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகள் முதலாய எண்ணில் பல்வழியானமையும் சிறந்த கட்டுரைகள் ஆங்கிலம், ஆரியம், தமிழ் மொழிகளில் வல்லார் பலராற் கற்றாரேயன்றிக் கற்பார்க்கும் பயனுறத்தக்க நெறியில் தெள்ளிய (எளிய) இனிய தீந்தமிழ் நடையில் எழுதப்பெறும். ஒருவரை, ஒரு குழுவினரை, ஒரு சமயத்தைச் சுட்டி இகழும் மாறுபாட்டுரைகளும், வேற்றுமையை உண்டாக்கும் உரைகளும் இதன்கண் அறவே காணப்படா. சங்கமே அரசியல் நெறியிற் கலவாத தொன்றாகவே அதன் சார்பினதாகிய இவ்விதழ் அரசியல் நெறியிற் சிறிதும் விரவாததொன் றென்பதைக் கூறலும் வேண்டா''...... இவ்வாறு முதன் முதலில் அறிவிக்கப்பெற்ற நோக்கங்களிலிருந்து பிறழாது மணிவிழாக் காணும் இன்றுவரை தமிழ்ப்பொழில் நடத்தப்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## நாடகம் படைத்த நற்கவியரசர்

பழந்தமிழ் இலக்கணப் பணிகளோடு பைந்தமிழ் இதழ்ப் பணியும் ஒருசேரக் கொண்டு ஏற்றமுடன் நடத்திவந்த வேங்கடாசலனார் 'இரட்டைக் காப்பியங்கள்' என இணைத்துச் சொல்லப்படும் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் நாடக வடிவில் அமைத்துத் தந்திருப்பது அவர்தம் நாடகஞ்செய் நற்றிறத்தைக் காட்டுகின்றது. அவற்றுள், மணிமேகலை நேர்முக உரையாடல் வகையிலும் சிலப்பதிகாரம் கவியரசரின் கற்பனைத் திறங்களோடு பல புதுமைகள் கொண்டும் சீரிய நிலையில் அமைந்துள்ளன.

''தமிழ்ப்பொழில்'' முதலாண்டு புரட்டாசி இதழிலேயே வேங்கடாசலனாரின் சிலப்பதிகார நாடகப் பகுதியில் இரண்டு களங்கள் இடம்பெற்றிருந்தன. அவற்றின் கதையைத் தொடர்ந்து களம் மூன்றும் நான்கும் துணர் இரண்டின் தைத்திங்கள் இதழில் வெளிவந்துள்ளன. மாணவர் நடித்துக்காட்டுவதற்காக எழுதப் பெற்ற இந்நாடகத் தொடர்ப்பகுதிகள் ஆண்டுதோறும் பொழிலில் பகுதிபகுதியாக வெளியாயின.

"சிலப்பதிகாரப் பேரழகில் ஈடுபட்டு நிற்கும் சங்கத் தலைவரவர்கள் ஆணையின்படி, சிலப்பதிகாரம் முழுவதுமே அரங்கில் நடித்தற்குரிய நாடகமாக எழுத மிக்க அவாக்கொண்டுளேம்" என்று குறிப்பிட்டதோடு இது யாருக்காக எழுதப்பட்டுள்ளது? இதை நாடகமாக்குங்கால் கைக்கொண்ட மாற்றம் யாது? என்பன பற்றியும் முன்னுரையில் கவியரசர் குறிப்பிட்டுள்ளார்.

"இச்சிறு பகுப்பினை எழுதுங்கால் அந்நூலின் அளப்பரிய பெருமைகள்-முன்னரும். இதனைக் கேட்டற்குரிய புலவர் குழாம்-வலப்பாலும் காணப்பெறினும், இதனை நடித்தற்குரிய சிறுவர் சிலர்-இடப்பாங்கில் நிற்றலையும் உணர்வேம். இடைநின்று இம் மட்டிற்றான் எழுத இயல்வேம் ஆயினேம்"-என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிலம்புக் காப்பியத்தில் இல்லாக் குடுகுடுப்பை, குறம் முதலிய படைப்புக் கூறுகள் மாணவர்க்கான இந்த நாடக ஆக்கத்தில் வெறும் உள்ளக்கிளர்ச்சிக்காக மட்டுமன்றித் தமிழ்ச் சங்கப்பெரும் பற்று, தமிழவேள் மீதான பெருமதிப்பு ஆகியவற்றைக் காட்டும் பாங்கில் இணைக்கப்பெற்றிருத்தலை உணரமுடிகின்றது.

காவிரிப்பூம்பட்டினக் கடற்கரைச் சோலையில் ஒருநாள் மாலையில் கோவலனும் மாதவியும் காதற்கானல்பாடி மனம் வேறுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் குடுகுடுப்பைக்காரன் இடைக்காட்சியாக அரங்கின் உட்புகுகின்றான். புகுந்து,

"ஓடிவாடா! ஓடிவாடா! வெள்ளை முனியா, கறுப்பு முனியா, வங்கத்து முனியா, சங்கத்து முனியா, ஓடி வாடா, ஓடிவாடா உற்றது சொல்லடா! ஒளிக்காமற் சொல்லடா! ஓ, ஓ! சலகம் வருகுது, சலகம் வருகுது, கலக்கம் வருகுது கலக்கம் வருகுது, கவலை வருகுது கவலை வருகுது, அவலம் வருகுது அவலம் வருகுது, கூட்டுப் பிரியுது, கூட்டுப் பிரியுது, கொடுமை நடக்குது கொடுமை நடக்குது, கொலை விழுகுது கொலை விழுகுது, ஒரு நகரம் எரியுது ஒரு பெரிய நகரம் எரியுது"—என்று சிலப்பதிகாரக் காப்பியப் பின் நிகழ்வுகளை முன்காட்டும் வகையில் அவன் புதுவதாக வருவது உரைக்கின்றான்.

அதே போக்கில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் எதிர்கால வளர்ச்சிப் பாங்குகளையும் குடுகுடுப்பைக்காரன் சொற்களில் வேங்கடாசலனார் மிக்க நம்பிக்கையோடு எடுத்துரைக்கின்றார்.

"ஓ, ஓடிவாடி, ஓ, ஓடிவாடி-உதிரக்காட்டேறி. உண்மையைச் சொல்லடி; ஒளிக்காமற் சொல்லடி; இச்சங்கத்துக்கு அதிட்டம்

வருகுது. இச்சங்கத்துக்கு அதிட்டம் வந்திட்டுது, இந்தச் சங்கத்தைச் சேந்தவங்கள் விழித்துக் கொண்டாங்கள் ... ... இந்தப் பள்ளிக்கூடம் நல்வாழ்வு அடையுது, என்னைப்போல ஏழைப் பிள்ளை எளிய பிள்ளை எத்தனையோ பேர் படிக்கப் போறாங்க பிழைக்கப்போறாங்க. இது கல்லூரி ஆகுது கலைமாடம் ஆகுது'' எனப் பேராவலுடனும் பெருமையுடனும் குறிப்பிடுகின்றார். அவரின் இத்தகு எதிர்பார்ப்புகள் பலவும் இற்றைக்கு நிறைவேறியுள்ளமையை நாம் பெருமையுடன் குறிப்பிடலாம்.

## 'கரந்தைக் கவியரசு'

தமிழ்ச் சங்கத்தின் தோற்றம் முதல் அதன் பல்வேறு முன்னேற்ற நிலைகளிலும் ஈடுபட்டு வாழ்ந்த வேங்கடாசலனார் அச்சங்கத் தமிழரின் பெரும்பாராட்டிற்கு உரியவரானார். சங்கத்தின் வெள்ளிவிழா 1936 இல் நிகழவேண்டியது, சற்றுப் பின்னிட்டு 1938 இல் நிகழ்ந்தபோது, அதன் சிறப்பு ஏற்பாடாக ஒப்பற்ற இந்நற்கவிப் பெருமகனாருக்குச் சிறப்புப் பட்டமளிப்பும் நிகழ்ந்தது.

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் முன்னிலையில் நிகழ்வுற்ற அச்சிறப்பு நிகழ்ச்சியில் அரங்க. வேங்கடாசலனார் ''கரந்தைக் கவியரசு'' எனப் பொற்பதக்கம் சூட்டிப் போற்றப் பெற்றார். நாவலர் நாட்டார் ஐயா அவர்களும் பண்டிதமணி அவர்களும் மற்றும் சான்றோர் பலரும் அப்பட்டத்திற்குரிய கவிஞர் பெருமானின் பொருள் பொதிந்த செய்யுட்படைப்புக்களை எடுத்துரைத்துப் பாராட்டளித்தனர்.

தமிழ்ப்புலமை தமக்குச்செறிய, மோகனூரியிலிருந்த அரசமரமும் அதனைத் துணையாக நின்றதென்று நம் கவிஞர் கருதினார். 'கவியரசு'பட்டம் கிடைத்தபோது தமக்கேயுரிய நகைச்சுவையோடு 'சிறுவயதில் நான், கவிந்த அரச மரத்தின் நிழலில் அமர்ந்து தமிழ் பயில்வது வழக்கம் அதனைக் கண்டவர்கள் யாரோ சங்கத்தாரிடம் தெரிவித்துவிட்டார்கள். உடனே சங்கத்தார் அதனையே எனக்குச் சிறப்புப்பெயர் ஆக்கிவிட்டார்கள்' என்று குறிப்பிட்டார்.

தமிழ்த்தாய் - வாழ்த்து, வணக்கம், திருவுருப் பற்றியும் தமிழ்க் கொடி, தீந்தமிழின் தெய்வத்தன்மை ஆகியனபற்றியும் பல தமிழ்க் கவிஞர் பெருமக்களின் செய்யுட்படைப்புக்களை கரந்தைத் தமிழ்ச் சங்கம் 1947 இல் 'மொழி அரசி' என்னும் பெயரில் தொகுப்பு நூலாக வெளியிட்டது. அதில் கவியரசரின் ஏழு பாடல்கள்

(மயங்கிசைக் கொச்சகக்கலி 1, ஆசிரிய விருத்தம் 2, இரட்டை விருத்தம் 2, ஆசிரியம் 1, செஞ்சுருட்டி இசைப்பா 1) இணைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"ஏற்ற விளங்கோலமுடன் என்றென்றும் வாழ்வாய்
எங்கரந்தைத் *தமிழ்ச்சங்கத்* திளிதுறை செந்தமிழே"

"நிலவுதிரு வார் *கரந்தை* நகரில் எழில்மேவு *சங்கம்*
நெடிது வளர்வாய் எமது அனையாளே"

"ஓது மைந்தரு ளாளே பராவுதும்
போது மூன்றுமு ளாளே பராவுதும்
ஓர்*க ரந்தையின் வாழ்வே* பராவுதும்—அடியோமே"

"தேவி *கரந்தையஞ் சங்கத்தின்* தொண்டு
சேவடி மோதிரம் செந்தமிழ்த் தாயே"

தமிழ்நிலைக்கும் கரந்தையையும் மொழிபுரக்கும் தமிழ்ச் சங்கத்தையும் மறவாமல் பலநிலையில் பாடித் தம் நெஞ்சத் திருப்பைக் கவியரசர் வெளிப்படுத்தியுள்ளார்.

## தமிழ்ச்சங்கமும் தமிழவேளும் கவியரசர் கண்கள்

தூய பேதுரு உயர்பள்ளியில் பத்தாண்டுகள் பணியாற்றிய பொழுதிலும் கி. பி. 1932 முதல் திருவையாறு அரசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பதவியேற்றுப் பத்தாண்டுகள் பணியாற்றி 1942இல் ஓய்வுபெற்ற நிலையிலும் கவியரசர் குன்றா ஆர்வத் துடன் தமிழ்ச்சங்க நலனில் ஒன்றிணைந்து திகழ்ந்தார் என்பதை எண்ணின் அவர்தம் தாய்மொழி ஈடுபாடும் தமிழின மேம்பாடும் புலப்பாடாகும்.

கரந்தையின் வடதிசையிலும் (ஐயாறு) தென்திசையிலுமாக (தஞ்சை) வேங்கடாசலனாரின் கல்விக் கண்கள் பார்வையிட்டுக் கிடந்திடினும், அன்னார் நெஞ்சமெல்லாம் கரந்தைச் சங்கத்திலேயே கவிந்திருந்தது எனலாம். தமிழ்ப் பெருமன்றத்தில் ஞாயிற்றுக் கிழமைதோறும் மாலைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தித் தம் சொற்றமிழ்ப் பணியை அவர் மேலும் வளமாக்கிக் கொண்டார்.

சங்கத்தின் பல்வேறு ஆக்கப்பணிகளிலும் தோய்ந்திருந்து தம் ஊரும் பேரும் 'கரந்தையே' 'சங்கமே' எனப் பலரும் போற்றும் முறையில் அவர் வாழ்ந்தார். திருவையாற்றில் ஓய்வுபெற்ற நிலை யில் 'இனி எங்குத் தங்க விருப்பம்?' எனக் கேட்டவரிடமெல்லாம் 'யான் கரந்தையில் தங்க வேண்டும்' என்னும் குறிப்புடனேயே வெள்ளிவிழாவில் தங்கப்பதக்கம் அளித்துவிட்டுத் தமிழவேள்

சென்றுள்ளார்கள்' என்று விடையிறுத்ததோடு அவ்வாறே கரந்தையே கதி எனத் தம் வாழ்நாள் முழுவதும் பணிசெய்து கிடந்தார்.

கவியரசரின் இளவல் வேலாயுதம்பிள்ளை 'மோகனுருக்கே வந்துவிட வேண்டும்' என்று பணியிலிருந்து ஓய்வுபெற்றுவிட்ட தமையனாரை வற்புறுத்தியபோது அவர் வாய்திறக்கவில்லை. ஆயினும் அவர் புதல்வர் சுப்பிரமணியம் "கரந்தைத் தமிழ்ச் சங்கம் மோகனூருக்கு வந்தால், தந்தையாரும் அங்கு வருவார்" எனத் தந்தையின் குறிப்புணர்ந்து உரைத்தார். அத்துணையளவு கவியரசர் கரந்தைச் சங்கத்தைப் பிரிய மனமின்றிப் பிணைப் புண்டிருந்தார்.

1942ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற நாள் முதற்கொண்டு, நாவலர் நாட்டார் ஐயா தலைமையில் கரந்தைப்புலவர் கல்லூரியின் துணைத்தலைவராகக் கவியரசர் பணியாற்றினார். 1946 முதல் பொறுப்பு முதல்வராகவும் இருந்து அக்கல்லூரி பேரும் புகழும் பெற்றுச் சிறக்க அவர் காரணமாய் இருந்தார்.

## வெண்பொற்கொடை

வளமான உடல்நிலையோடு ஓய்வுபெற்றுக் கரந்தைக்குள் புகுந்த கவியரசரின் உடல்நிலையில் சிறுகுறை ஏற்பட்டது. அவரின் வீறு நடை தளர்வுற்றது; ஊன்றுகோல் கொண்டு நடக்க நேர்ந்தது. நாளடைவில் அதுகொண்டும் நடக்கவியலா நிலை வந்துற்றது. உடல் தளரினும் அவர் உள்ளம் தளரவில்லை நகைத் திறம் பெருகிற்று. அத்தமிழ்த் தொண்டுள்ளமோ அவர் பணியார்வத்தை மேன்மேலும் உறுதியாக்கி முன்னேற்றியது. சங்கத்தருகில் குடியிருப்பை மாற்றிக்கொண்டு சக்கரங்கள் பொருத்திய தள்ளுவண்டியில் அமர்ந்து மற்றொருவர் துணையோடு கல்லூரிக்கு வந்து தொடர்ந்து கல்விபயிற்றி வந்தார்.

பன்முறை காப்பி அருந்திப் பல்காப்பியனாராகவும் வாய்சிவக்க அடைக்காய் மென்று செந்நாப்புலவராகவும் தாம் தோற்றமளிப்ப தாகக் கவியரசரே நண்பர்களிடம் சொல்லிப் புன்னகை புரிவார்.

கவியரசரின் அறுபதாம் ஆண்டு நிறைவைத் தமிழ்ச் சங்கம் தனிவிழாவெடுத்துக் கொண்டாடியது. 1946ஆம் ஆண்டில் சங்கத் தலைவர் திருவாளர் ஆ. யா. அருளானந்தசாமி நாடார், சங்க அமைச்சர் தமிழ்ப்பேரறிஞர் நீ. கந்தசாமி பிள்ளை ஆகியோர் ஒத்துழைப்புடன் தமிழாசிரியர் அ. பொன்னண்ணாக் களத்தில்

வென்றார் ஆகியோர் முயன்று மணிவிழா எடுப்பித்தனர். தமிழன்பர்களிடம் திரட்டிய ஆறாயிரம் வெண்பொற்காசுகள் அவ்விழாவில் கவியரசருக்கு நன்கொடையாக வழங்கப் பெற்றது.

சங்கச் சான்றோர்களின் செவ்விய புலமையும் இக்காலத் தமிழ் மாந்தர்களின் எழுச்சியும் ஒருங்கமையப்பெற்ற கவியரசர் தம் வாழ் நாள் முழுவதும் பெருஞ்செயல் வீரராக விளங்கியதை போலவே, கரந்தைத் தமிழ்ச் சங்கமும் தமிழுலகமும் அவருக்குத் தந்தையும் தாயுமாகிப் போற்றலைப் பெருங்கடனெனக் கொண்டு பொலிவுடன் செய்தது எனலாம்.

## கற்பித்தல் திறம்

கற்பவர் இயல்பறிந்து அவர்களின் மனங் கொள்ளுமாறு கற்பிப்பதில் கவியரசர் வல்லவர். இனிய சொல்லும் எளிய வாழ்வும் நகைச்சுவை உணர்வும் அறிவார்ந்த உரையாடலும் நிரம்பிய கவியரசர், எத்தகையோரும் பற்றுவைக்கவும் மதிக்கவும் உரிய பெரியரானார்.

ஆசிரியர்கள் எவ்வாறு பாடம் சொல்லவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகக் கவியரசர் திகழ்ந்தார் எனலாம். எளிய சொற்களைக்கொண்டு நெஞ்சுகொளச் சொல்லும் கற்பித்தல் திறம், அவரிடம் குடிகொண்டிருந்தது. இயல்பாகவே நகைச்சுவை கெழுமிப்பேசும் கவியரசர், இலக்கணப்பாடங்களை நுண்ணுணர்வு இல்லாதாரும் புரிந்துகொள்ளும் வகையில் கதைக்கூறுகளைப் பயன்படுத்தி எளிதில் தெளிவு செய்து ஏற்க வைப்பார். இத்தகு பாடம் கூறும்முறை அவருக்கே உரிய தனிச்சிறப்புமாயிற்று.

உருபேற்பது பெயர்ச்சொல்லின் இலக்கணத் தன்மை. அவ்வாறு உருப்பேற்கும்போது உருப்பிற்குத் துணையாகச் சாரியை வந்து இடம் பெறும். இணைப்பிற்கு வரும் சாரியை, உருபை ஓட்டிவிட்டுப் பெயரோடு ஒட்டி நிலைத்து விடுவதுண்டு. இச்செய்தியை உலகியல் நிகழ்வோடு கவியரசர் இணைத்துக் கூறி மிகவும் எளிமையாக்கியுரைப்பார். கணவனும் மனைவியும் மணந்துகொண்டு வாழ்க்கை நடத்த முற்படும்போது ஒத்துழைக்க வரும் பணிப்பெண் அரிதாகச் சில வேலைகளில் மனையாளை ஓட்டி விட்டுக் கணவனோடு நிலைபெற்றுவிடுவது போன்று, துணைக்கு வந்த சாரியை பெயருக்கே முதலாகிவிட்டது எனக் கவியரசர் நகையும் உவகையும் பெருக எடுத்துக் காட்டியிருப்பதை எவரும் மறக்க முடியாது.

இலக்கணத்தில் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட எழுத்துக்களை ஓரெழுத்தாகக் கருதிக் கூறுவது ஒற்றுமை நயம். வேறுபட்ட பல எழுத்துக்களாகக் கருதிக் கூறுவது வேற்றுமை நயம். உயிர்மெய் என்பதனை உயிருடன் கூடிய மெய்யெழுத்து என ஓரெழுத்தாகக் கருதிக் கூறுவது ஒற்றுமை நயம்; உயிரும் மெய்யும் என்று பலபொருள் உம்மைத் தொகையாகக் கருதிக் கூறுவது வேற்றுமை நயம். இதனை "ஒரே பயணச் சீட்டில் தாயும் சேயும் பயணம் மேற்கொள்வது ஒற்றுமை நயம்; பொருட் கொடை பெறும்போது தனக்கும் குழந்தைக்கும் தனித்தனியே கொடையளிக்குமாறு கேட்டுப் பெறுவது வேற்றுமை நயம்" என்று கூறி விளக்குவார்.

"எண்ணறக் கற்று எழுத்தறப் பயின்றும் பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே" என்னும் பழந் தொடருக்குக் கவியரசர் 'பெண்ணறிவு' தானே என இகழ்ச்சியாகக் கூறுவது பெரிய பேதைமையது எனப் புத்துரை கூறி, ஆண்-பெண் அறிவுப் பொதுமையைச் செவ்விதாகவற்புறுத்துவதும் ஈண்டு உணரத்தக்கது

## கவியரசரின் படைப்புக்கள்

மூப்பு எய்தி யாக்கை தளர்வுற்றவிடத்தும் ஊக்கத்தோடு தமிழ்த் தொண்டாற்றிய கரந்தைக் கவியரசர்—ஒரு நல்லாசிரியர், நற்கவிஞர், நகைச்சுவைப் பொழிஞர், கட்டுரையாளர், நாடகப் படைப்பாளர், உரையாசிரியர் எனப் பல்திறம் மிக்கவராகத் திகழ்ந்துள்ளார்.

ஆசானாற்றுப்படை, இன்பப்பத்து, துன்பப்பத்து, பிணிப் பத்து, வறுமைப்பத்து முதலிய அரிய பாடற்றொகுதிகளையும் மிகப் பல வரவேற்புப்பாக்களையும் வாழ்த்துப்பாக்களையும் கவியரசர் வழங்கியுள்ளார்.

அகநானூற்றிற்கு நாட்டாரையா அவர்களோடு இணைந்து உரை கண்டுள்ளார். தெய்வச்சிலையாரின் சொல்லதிகாரவுரையைப் பதிப்பித்திருப்பதோடு, அவ்வுரைமீது ஆய்வுரைகளையும் தமிழ்ப் பொழில் முதல் துணரில் கவியரசர் தந்துள்ளார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலையாய குறிக்கோளில் ஒன்று தூய தமிழில் பேசுதலும் எழுதலும் அவ்வாறே தமிழரைப் பேசுவித்தலும் எழுதுவித்தலும் ஆகும். இக்குறிக்கோளை இளையோர் நெஞ்சில் வித்தி, நற்றமிழ்ப்பயிரை விளைக்கக்

கவியரசர் 'செந்தமிழ்க் கட்டுரைகள்' என்னும் கட்டுரைத் தொகுதியையும் வெளியிட்டார். 'செந்தமிழ்க் காவலர்' எனப் போற்றத்தகும் பெருமைக்கேற்ற தமிழ் நலப்பாங்குகளைக் கவியரசர் அந்நூலில் எடுத்துரைத்தார்.

''நல்ல தமிழ்ச் சொற்கள் இருப்பவும் பிறமொழிகளினின்று வரம்பின்றிச் சொற்களைக் கொண்டுவந்து புகுத்துவது தீம்பாலில் நச்சுநீர்க் கலத்தல் போன்றது'' என்று கவியரசர் எச்சரிக்கை காட்டியதோடு' நம் பல்வகைத் திருவும் தாய்மொழியே என்றிருக்கும் தமிழ் மக்களாகிய நாம், இம்மொழித் திருவினையும் இழந்து என் செய்வோம்'? என எங்கிக் கேட்டுள்ளார்.

கவியரசரே பொழிற்றொண்டராகவும் இருந்ததால் 'தமிழ்ப் பொழில்' முதல் துணர் மலர்கள் அனைத்திலும் அவரின் கட்டுரைகள் இடம பெற்றன. 'தொல்காப்பியம்', சொல்லதிகாரம் - பேராசிரியர் (தெய்வச்சிலையார்) உரை', 'ஏறுதழுவுதல்' இளவேனிற் காலத்து இன்ப மாலை' என்பன போன்ற ஆய்வுக்கட்டுரைகளும் 'நாட்டுப் புறங்களின் கல்வியும் நாட்டாண்மைக் கழகங்களின் கடமையும்' 'நற்றாயும் செவிலித்தாயும்' என்பனபோன்ற மொழியுணர்வுக் கட்டுரைகளும் என்றும் கற்று உணரத்தக்கவையாகும். பொழிலில் 'மாணவர் பகுதி' என்பதாகவும் பகுத்துக்கொண்டு கவியரசர் புகழேந்தி, ஒட்டக்கூத்தர், பச்சையப்ப முதலியார் போன்ற நாடகங்களையும் அ. சோமசுந்தரம், அழுமுஞ்சிச் செல்லையா போன்ற புனைவுக் கதைகளையும் மற்றும் பாக்களையும் இலக்கண விளக்கங்களையும் அவர் எழுதியுள்ளார். இவற்றோடு இற்றைத் தமிழகத்தில் வேங்கடாசலனாரிடம் பயின்ற பான்மையரே மிகுதியும் ஆசிரியர்கள் பொறுப்பேற்றுத் தமிழறிவு தழைக்கச் செய்து கொண்டிருக்கின்றவர்கள்.

'' வேங்கடா சலமென ஓங்கிய புலவன்
கரந்தை ஐயாற்றுக் கல்லூரி தம்மில்
புலவர் பலரைப் புதுக்கியுண் டாக்கினோன் ''

என்று இதைப் பெருமைப்படுத்திச் சொல்லுவதே அவர் படைப்புக் களுள் புகழ் சான்றதும் ஆகும் எனலாம்.

நற்கல்வி பெற்ற திறத்தால் பாட்டியற்றி, உரைவரைந்து, பாடமுரைத்து இம்முத்துறையிலும் கவியரசர் முன்னுணர் தமிழ்ப் பெரியாராய்த் திகழ்ந்தார்.

## கவியரசர் மறைவும் நினைவு மலரும்

1953 ஆம் ஆண்டில் தமிழ்ச்சான்றோர் பலர் இயற்கையெய்த நேரிட்டுவிட்டது. பண்டிதமணி மு. கதிரேசனார், திரு. வி.கலியாண சுந்தரனார் ஆகியோர் மறைவையடுத்து டிசம்பர்த் திங்கள் ஆறாம் நாள் கரந்தைக் கவியரசரும் மறைந்தார். அவர் மறைவு தமிழ்ச் சங்கத்தாருக்கு மட்டுமன்று, உணர்வுடைத் தமிழர் எல்லோர்க்குமே ஈடுசெய்யவியலா இழப்பாயிற்று.

தமிழ்ச் சங்கம் 'கரந்தைக் கவியரசர் நினைவு மலர்' ஒன்றை வெளியிட்டு அவர் நினைவைப் போற்றியது. தமிழ்ப் பேராசிரியர் களும் கவியரசரின் மாணாக்கர்களும் பிற தரப்பினரும் அதில் பாக்களிலும் உரைகளிலும் அன்னாருக்கு இரங்கலைத் தெரிவித்து அமைந்தனர்.

கல்விநெறித் தனியாசான் கல்லூரிப் பெரும்புலவன்
கணக்கில் லாண்டு
நல்லெழிலார் பொழிற்றொண்டன் நயமிகுகட் டுரையாளன்
நாவல் லாளன்
எல்லையிலாத் தமிழ்ச்செல்வன் கவியரசைத் தமிழ்த்தாயும்
இழந்தா ளந்தோ !
பல் வளனார் வேங்கடா சலச்செல்வன் தமிழ்த்தொண்டைப்
பகரொன் னாதே ! (சி. கோவிந்தராசனார்)

செப்பு மொழிதோறும் தேர்ந்த தொனிப்பொருளும்
தப்பில் நகைச்சுவையும் தான்தோன்ற — இப்புவியில்
உன்னையன்றி எங்கட் குரைப்பார்யார் ? ஓங்கு தமிழ்
அன் னையென யாரளிப்பார் அன்பு. (ச. பாலசுந்தரனார்)

### ஒரு துயரம்

அந்தோபாழ்ங் கூற்றே! யெம் மண்ணல்நற் கண்கொண்டாய்
முந்துபுரி தீச்செயல்கள் முற்றாவோ-சிந்தையிலாய்!
மண்மக்க ளெல்லாந்தன் மக்களெனக் கொள்வானை
என்னையினிச் செய்வ திடர்?

வேங்கடாசலம்

சங்கத் தலைவரவர்களின் முதன்மகனும் சங்கத்தின் அருமைத் தொண்டனுமாகிய பஞ்சாபகேசன் மறைந்தபொழுது கவியரசர் கலங்கி யாத்த கவிதை.

## மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

வளம்பெருகி மகிழ்பூத்த மாவிந்தி யாமடந்தைக்
குளம்பொருவென் றுரைசான்ற தென்னாட்டி னோர்மொழியா
இன்னகைய இளையசிறா ரிளங்குதலை யேரென்ன
மென்மையினி மைமுதலா மேதக்க குணங்கனிந்து
நுண்ணியநூற் கலையணிந்து நுவலறியாப் புகழ்சூடிக்
கண்ணியஞ்சேர் முதுகுடிக்குக் களைகணாந் தமிழ்த்தாயே.

குறிஞ்சிமுத லைவகையிற் குறித்ததிணைக் குடிவாழ்க்கை
நெருங்கிநெகி ழாவன்பி னிகழ்களவு கற்பென்றே
அருதிறத்த வொழுகலாற் றினிதொழுகிப் பெரும்பேறா
வருள்கனிந்தெப் பற்றுமறுத் தந்நிலையா லெந்நிகரும்
அற்றதிரு வருட்பிழம்பை யறிவுருவாங் கந்தழியைப்
பெற்றுவருந் தமிழ்க்குடிக்குப் பிறங்கன்னை யாமமிழ்தே.

தனித்திடினும் பிறமொழிகள் தலைப்பெயினு மொருநிலையா
இனித்தநினைக் கன்னிவரை யியலாயென் பதுமென்னே ?

தொன்மைமுதற் பெறுவனப்பின் றொகையுணரும் புலவர்நினக்
கம்மையிலை யெனத்தருக்கி யறைவதுமோர் வியப்பன்றே ?

முந்துதிரு முறைதிருவாய் மொழிகுறளா முன்னூலைத்
தந்தவெம தாய்மொழிக்குத் தாய்மொழியோர் சேய்மொழியே ?

இத்துணைத்தெம் புதுமையெனு மேதின்மொழிச் செருக்கெல்லை
அத்துணையு மான்றநின தமைவோரு மந்நாளே!

ஏட்டின்முன மெழுதுமெழுத் தின்றுமெதி ராற்றேறக்
காட்டுநினக் கந்நாள்வை கைக்கதையொன் றருமையதே!

இழுமென்ற விழுமியநின் னெழுத்தொன்றும் மொழியாய
தழல்வெம்மை தணிந்துநினைத் தகையாத தொருவியப்போ?

உலகறியா வொருகாலத் துளங்குறித்த அறங்குறித்த
நிலவியலார்! நினக்குநிகர் நேர்வர்நடு நிலையோரே?

அணிமறையா தியற்கைநல மான்றுதெரி பொருணூலிற்
கணிபொருளோ குளிர்நடையோ களிமனத்தைக் கவர்ந்திடலே?

ஞாலமிசை நினதருமை நாட்டுகெனின் நல்லிசையோர்
காலமுளப் பாங்குபிற நாட்டுபடங் காட்டுவரே!

எண்விழுங்கு மேரணமுன் னியம்புபல நூல்விழுங்க
மண்விழுங்குங் கடல்விழுங்கு மலிபுகழ்க்கு மாறென்னே?

எனவாங்குச்

சிலவும் பலவும் சீர்தெரித் தேனும்
புகன்றோர் புலத்திற் பொருந்தின அன்றிக்
கலித்தொகை முதலாக் காண்டகு சிறப்பின்
ஒண்மாண் புலநூ லுள்ளுறை யாய்ந்த
நல்லிசைப் புலவர் நயப்பினு முரைக்க
ஒல்லுமா றானா துனதுயர் புகழே

— அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

மொழியரசி, முதற்பாகம் (கரந்தைத் தமிழ்ச் சங்கம், 1947) பக். 7-10

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே !
மன்னியஆழ வேந்தர்கடம் மடிவளர்ந்த மகளே !
தேனார்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி யாயிடைநற் செங்கோல்கொள் செல்வி !
கானார்ந்த தேனே ! கற் கண்டே ! நற் கனியே !
கண்ணே ! கண் மணியே ! அக் கட்புலம்சேர் தேவி !
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே !
அம்மே ! நின் சீர்முழுதும் அறைதல் யார்க் கெளிதே ?
ஆற்றிடினும் தீயிடினும் அன்பர் தமைக் காத்தே
அவர் வேண்டும் பேறருளும் அன்பே ! புன்மாக்கள்
போற்றிடினும் தூற்றிடினும் பொருள்செய்யாப் பொறையே !
பூவிலிணை மொழியில்லாப் பொலிவுடைய பொற்பே !
மாற்றறியாப் பொன்னே ! நன் மணியே ! செஞ்சுடரே !
வாடாத மண மலரே ! மணந்தரு தென் காலே !
ஏற்ற விளங் கோலமுடன் என்றென்றும் வாழ்வாய்
எங்கரந்தைத் தமிழ்ச்சங்கத் தினிதுறைசெந் தமிழே !

— அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

மொழி அரசி முதற்பாகம், (கரந்தைத் தமிழ்ச்சங்கம், 1947), பக் 13-14

## பதினான்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பெருகார்வ மோடு முனைநாளை மன்னர்
பிரியாத தொண்டு செயலாலே

பெரியார் புலத்த முதியோர் நலத்த
பெருநூற் கலன்கள் தரலாலே
ஒருகால் தனக்கே யிணையார்கொ லென்ன
உறுபோர் தொடுத்த ஒருமாதும்
உலகோர் வழக்கும் அறவே செருக்கும்
ஒழிகிற்க வென்ற முதலாயே!
மருவார் தடத்த மலிமேடை மீது
மணமோடு வந்த சிறுகாலே!
மதியே! மதித்தண் வளமே! யெமுள்ளம்
மகிழ்வித்து நிற்கும் ஒருதேவே!
திருவார் கரந்தை நகரேய தொண்டு
திகழ்கின்ற சங்கம் அதுமேவி
தினநூறு நூறு மகவோர் தமக்குப்
பெருவாழ் வளித்து வளர்வாயே!

—அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

மொழி அரசி, முதற்பாகம் (கரந்தைத் தமிழ்ச்சங்கம், 1947) பக். 14.

## இரட்டை விருத்தம்

### 'சரண கமலாலயத்தை' எனும் இசை

இறையவனோ டாறுமுகன் கலைமகள்முன் றேவருநின்
இனியசுவை யார்தருமோர் நசையாலே
இலகுதமிழ் வாணர்களா நினதுபுகழ் பாடிடுவார்
இசைநெடுமா லேவுபணி புரிவானே!
குறுமுனிதொல் காப்பியன்நற் கபிலன்இணை சேர்பரணன்
குறள்முனிஔ வைமுதல் நல் லிசையோர்கள்
குலவு சங்க மேவினர்கள் திருமனத்தி னோடரசர்
குமணன் வள்ள லார்கரத்தும் வளர்வாயே!
மறுவறு வெண் மாமதியம் பொழிதருதண் ணேர்நிலவே!
மழலையர்கள் ஏர்மொழியே அமிழ்தூறும்
மணிவரைப்பொன் னார்நிலத்தே வளர்கனுவி லாக்கரும்பே
மலியமிர்த மேநிறைந்த கடல்போல்வாய்!
நிறைதருசெந் நூலுடையாய்! அழிவிலாவா ணாளுடையாய்!
நினையுலகில் நேர்வதெது? எமையாள்வாய்!
நிலவுதிரு வார்கரந்தை நகரில் எழில் மேவுசங்கம்
நெடிது வளர்வாய் எமது அனையாளே!

—அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

மொழி அரசி, முதற்பாகம், (கரந்தைத் தமிழ்ச் சங்கம், 1947) பக். 15.

# நமது பொழில்*

கரந்தைக் கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

நமது தமிழ்ப்பொழிலின் நறுமண நுகர்வினை நமது சங்க அன்பர் பலர் பன்னெடு நாட்களாக அவாவி வந்தனர். எனினும் 'அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா' வாகலின், திருவருட்பேற்றிற்கு இலக்காகிய இந்நாளே இப்பொழிற் றிறப்பு விழாவினைக் கூட்டி அன்பர்கட்குப்பொழில் மணநுகர்ச்சியை எய்துவிக்க இயலுவேம் ஆயினம். நெடிய காலத்தாழ்வினை அன்பர்கள் பொறுத்தருள்வார்களாக.

பொழிலின் பொற்பினை விழையாதார் எவ்வுலகத்து யாவர் உளர்? தனது பசு நிறத்தால், வண்டொலியால், தீங் கனிபால், மலர் மணத்தால், பைம் புற்றரையால்-கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் பேரின்பினைத் தன்பால் எய்தும் எத்திறத்தோர்க்கும் எஞ்ஞான்றும் தரவல்லது பொழில் ஒன்றே யன்றோ! பொழிலின் எழிலினை யுணர்ந்தன்றே, நமது முன்னைப் பெரியோர்கள் நமது நாட்டினைப் பொழில் எனக்கூறி மகிழ்வாராயினர். எனவே இங்ஙன் ஒப்பும் உயர்வும் இல்லாச் சிறப்பினதாய பொழிலின் பொற்பினை யுணர்ந்தே இந்தத் திங்களிதழிற்குத் 'தமிழ்ப்பொழில்' எனப்பெயரிட்டனம்.

நமது பொழில் ஆண்டுதோறும் விரியும் பைந்துணர்ச்செறிவும், அவ்வத் துணரகத்தே திங்கடொறும் மிளிரும் தூமலர்ப் பொலிவும், மலர்தொறும் மலியும் இதழ்களின் மாண்பும் கொண்டு செந்தமிழ் நறுமணம் செவ்விதிற் கமழ்வது; செந்தமிழ்த் தாயின் திருவடிக்கு உரிமையினதாக அத்தாயின் தவமக்களாய புலவர் பெருமக்கள் பல்லாரால் அன்பொடு புரந்துவரப் பெறுவது. அறிவான் முதிருநரும், இளைஞருமாகிய ஆடவர், மகளிர், மாணவர் முதலிய யாவரும் எளிதில் எய்தி இன்புறும் இயல்பினது நிற்க.

உலகத்தின் விரைந்த முற்போக்கையொட்டித் தமிழர்தாமும் விரைந்து முன்னேற வேண்டியவர் ஆகின்றனர். அம்முன்னேற்றத் தின் சிறந்தவழியென யாவர்க்கும் ஒப்ப முடிந்துளது ஒன்றே. அது "சப்பான் முன்னேற்றம் தனையடைந்து பேர்பெற்றதப்பா!

---

* மணிவிழாக் காணும் இத் 'தமிழ்ப்பொழில்' இதழை 1925ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கம் தொடங்கியபோது முதல் இதழாசிரியராகத் திகழ்ந்த 'கவியரசு' அவர்கள் தமிழ்ப்பொழில் பெயர்த்திறம்பற்றியும் அதன் இலக்குப்பற்றியும் தெரிவித்த கருத்துக்கள் ..

தன் மொழிவளர்ச்சி யாலேகாண் என்மகனே" என ஓர் புலவர் எடுத்துக்காட்டுடன் சுருங்கக்கூறி விளங்க வைத்திருப்பது கொண்டு தெள்ளிதின் உணரப்படும். நாட்டின் முன்னேற்றத்திற்குரிய ஒற்றை நற்றுறை மொழி வளர்ச்சியே; வேறெதுவும் இன்று.

மொழி வளர்ச்சி, சமய வளர்ச்சி முதலியவெல்லாம் சங்க வாயிலாக நிகழுமிடத்தே நிலைபெற்று உரம் பெறுவனவாகும். இவ்வுண்மையைப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே உணர்ந்து வைத்துத் தாமும் ஒழுகி, உலகத்திற்கும் உணர்த்தினவர் நமது தமிழ் நாட்டினரே. இற்றைஞான்று உலகத்து எத்தகைக் குழுவினரும் தாம் கருதும் எவ்வெத் தொழில் வளர்ச்சிக்கும் சங்கங்கள் நிறுவிப் பயன் பெற்று வருதலைக் கண்கூடாக உணர வல்லார்க்குச் சங்கங்களின் இன்றியமையாமையை விரித்துரைத்தல் வேண்டா.

இனி, ஒரு சங்கத்தின் வாய் எனும் சிறப்பிற்றாய் அதற்கு ஆக்கந்தந்து வளம்படுத்த வல்லது அச்சங்கத்திற்கென்று உரித்தாய இதழேயாகும். இதனானன்றே மேனாட்டகத்து மொழிநலம், குமூஉ நலம், அரசியல் நலம் முதலாய பல்வகை நலங்குறித்து அமைந்துள்ள எவ்வகைச் சங்கங்கட்கும் இதழ் ஒன்றோ, சிலவோ, பலவோ அமைந்திருக்கக் காண்கின்றோம். சங்கங்களின் நோக்கங் களையும் முயற்சிகளையும் அச்சங்க உறுப்பினரும், அயலாரும் உள்ளவாறே உணரஎடுத்துரைத்தும், ஏதிலார் உள்ள விடத்து அவர் தம் ஏதவுரைகளைத் தடுத்துரைத்தும், சங்கங்களை வளம் படுத்தவல்லது இதழ் ஒன்றேயாகும் என்பது ஒருதலை.

தாய்மொழித் தொண்டியற்றிவரும் இச்சங்கம் மேற்கூறியாங்குத் தனக்கென ஓர் இதழின் இன்றியமையாமையினைப் பல்லாண்டு களின் முன்னரே உணர்ந்தது. எனினும், அரியபொருளின் அருமையை உணர்வார் அருகிய இஞ்ஞான்று தமிழ்ச் சங்கங்களது இதழ் வெளியீடு, நூல் வெளியீடுகட்குச் செலவிடும் பொருள் எத்தகைய ஊதியமும் பயவாமையோடமையாது முதலிழப்பாகவும் முடிவதுணர்ந்த இச்சங்கம், தனது சுருங்கிய பொருணிலையில், இங்ஙன் ஆக்கங்கருதி முதலிழக்குஞ் செய்வினையிற் றலையிடுதல் தக்கதொன்றா என நெடிது எண்ணிவந்தது, எனினும் மற்றோர் பால், தனது பல்வகை நோக்கங்களையும், முயற்சிகளையும் செயல்களையும் சங்க உறுப்பினர்கட்கும், பிறர்க்கும் அவ்வப்போது உணர்த்தலாகாமை பற்றிக் கவன்று வந்தது. தன் நோக்கங்களிற் சிறந்ததொன்றாகிய தமிழ் நூலாராய்ச்சி முதலிய வெளியீட்டிற் புகவியலாமைபற்றி உளம் நெகிழ்ந்து வந்தது; தமிழ்மொழியின் சிறப்பினையும், தமிழர் சிறப்பினையும் உள்ளவாறு உணராமையின்,

வழியலா வழியிற்செல்வாரை உண்மையை எடுத்துரைக்குமாற்றாற் றடுத்து நல்லாற்றுப் படுத்தலாகாமைபற்றி யுளம் மெலிந்துவந்தது. இங்ஙனம் பல்லாற்றானும் புடைபடக் கவன்றுவந்த சங்கம் இடையறாது ஊக்கிவந்த சில உண்மையன்பர்களின் துணை வலியினை நோக்கி, இவ்விதழ் வெளியீட்டினைத் துணிந்து இற்றைஞான்று தொடங்கியுள்ளது.

இவ்விதழ் ஓர் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடு எனும் தகுதிக் கேற்பத் தமிழ் வளர்ச்சியும், தமிழர் மேம்பாடும் பற்றிய அருமைக் கட்டுரைகளையே தன்னகத்துக்கொண்டு வெளிவரும். தமிழ்மொழி வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ்ச் சொல்லாக்கம், தமிழ் நூலாராய்ச்சி, பழந் தமிழ் நூல் வெளியீடு, அரியநூல்களின் தமிழ்மொழி பெயர்ப்பு, தமிழ்த் தனிச்செய்யுட்கள் வெளியீடு, தமிழ்நூன் மதிப்புரை, தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகள் முதலாய எண்ணில் பல்வழியானமையும் சிறந்த கட்டுரைகள் ஆங்கிலம், ஆரியம், தமிழ்மொழிகளில் வல்லார் பலராற் கற்றாரேயன்றிக் கற்பார்க்கும் பயனுறத்தக்க நெறியில் தெள்ளிய (எளிய) இனிய தீந்தமிழ் நடையில் எழுதப்பெறும். ஒருவரை, ஒரு குழுவினரை, ஒரு சமயத்தைச் சுட்டி இகழும் மாறுபாட்டுரைகளும், வேற்றுமையை உண்டாக்கும் உரைகளும் இதன்கண் அறவே காணப்படா. சங்கமே அரசியல் நெறியிற் கலவாததொன்றாகவே, அதன் சார்பினதாகிய இவ்விதழ் அரசியல் நெறியிற் சிறிதும் விரவாததொன்றென்பதைக் கூறலும் வேண்டா.

கல்விப் பொருளும், செல்வப் பொருளும் கவினிய தமிழ்மக்கள், தமிழன்பர் ஆவார் ஒவ்வொருவரும் கட்டுரைகள் எழுதல், உறுப்பினர் ஆதல், தத்தம் அன்பர்களை உறுப்பினராக்கல் முதலாய உதவிகளுள், தத்தமக்கு இயன்ற உதவிகளைச் செய்தருளுமாறு சங்கம் மிக மிக வேண்டிக் கொள்கின்றது.

மதிநுட்பம் நூலோடமைந்து தாளாண்மை மிக்காராய ஒருவர் மேற்கோடற்குரிய தாள் ஆண்மைத் தொழிலில் ஒன்றும் பற்றாத ஓர் ஏழையேம் முன்னிற்றலை உணரும் அறிஞர்கள் வல்லார் பலர் துணை நின்று உதவ வாய்ந்திருக்கும் மறையினைக் கருதி யுணர்வதோடு, இம்முதலிதழானே கண்டும் உணர்வார்களென எண்ணுகின்றேம். நலம்.

இங்ஙன்,

**ஆர். வேங்கடாசலம்**

இதழ் ஆசிரியர்.

தமிழ்ப்பொழில், துணர்: க, மலர்: க,
(குரோதன-சித்திரை 1925) பக். 1-4.

## நமது பொழில்

நமது பொழில் பொருள் ஈட்டும் நோக்கத்துடன் வெளி வருவதன்று. கைப்பொறுப்பு இல்லாத நிலையையே பெரிதாக எண்ணி மகிழ்வதொன்று. ஆகவே, பொழில் உறுப்பினர்கள் மன முவந்து தங்கள் தங்கள் நண்பர்களுடன் கூடி, இத்தமிழ்த் தொண்டில் விடா மனவுறுதியுடன் கலந்து, தாய்த் தொண்டியற்றிவர அருள் புரிவரேல், பொழில் நாளும் வளர்ந்து தழைப்பதுடன், கையொப்பத் தொகையும் அளவிற்குறைய, உறுப்பினர்க்கு மிகுநன்மை யளித்து வரும். இதழாசிரியர்.

தமிழ்ப்பொழில், துணர்-1 ; மலர்-10. பக். 386.

## பொழிலின் புத்துயிர்

தமிழ்த்தாயின் திருவருளால், நமது தமிழ்ப் பொழில் இனி இவ்வெட்டாம் ஆண்டில் புத்துயிர் பெற்றுப் பொலிவுற விருப்பதை, உள்ளம் நிறைந்தோங்கும் உவகையொடு அன்பர்கட்குக் கூறும் பேறுடையேன் ஆகின்றேன்...

கடந்த ஏழாண்டாக, யான் புரிந்து வந்த தொண்டெல்லாம், அன்பர்கள் வரைந்துதவிய கட்டுரைகளை அச்சிடற்காம் அச்சுத் திருத்தம் செய்தல் முதலிய சிறு தொண்டுகளே யாம். எங்கோ ஒன்றிரண்டு கட்டுரைகளும் காணப்படுகின்றனவே என்பாரும் உளராயின், அன்னோர் அருள்கூர்ந்து அவையிற்றை நோக்கி, அவையெல்லாம், அறிஞர்கள் கட்டுரைகள் முற்றும் இல்லாத போதோ, அவை ஒரு பாரத்தின் இடையில் நின்றுவிட அவ்வெச்சத்தினை நிரப்ப நேர்ந்தபோதோ, அச்சுச்சாலையில் நின்ற நிலையில் எழுதியனவே யாதலையும், இவ்வுண்மைக்குக் கரியாக ஆங்காங்குக் காணப்பெறும் 'தொடரும்' எனும் உரைகள் பின்னர் அமையம் நேராமையின் தொடராதே எஞ்சி யொழிந்திருத்தலையும் கண்டு உண்மை உணர்வார்களாக...

ஒரு தொண்டர் செயவேண்டும் அலுவல் இவையெனலை யான் முற்றும் உணராதொழிந்தேனல்லேன் ; சிறிதும் முயலா திருந்தேனு மல்லேன். என்செய்வேன் ! என் வாழ்க்கையில் எனக்கெய்திய மனச்சோர்வுகளும், உயர்தரத்தினர் எனப்படும் இளைஞர்கள் பயிற்சியில், என்னுடல் வலி இடந்தரும் அளவெல்லாம் யான் பொழுது போக்கிவர நேர்ந்தமையும் காரணமாக, யான் புலவர் உலகிற் புகவும், எனது புல்லறிவிற்கு எட்டுவனவற்றைத் திரட்டி யுரைத்துவரவும் இடம்பெறேனாயினேன். என்றாலும், இம் மட்டிலாதல் என்னைத் தொண்டனாக்கி வைத்திருந்த திருவருட் செயலினை நோக்கி வியப்புற வேண்டியவன் ஆகின்றேன் ......

அன்பரீர் !

இனி, யான் எனது தொண்டுரிமையை இன்று விடுவேனாயினும், இதுகாறும் செய்துவந்த என் எளிய தொண்டிற்குறையாத தொண்டுகளை என்றுஞ் செய்திருப்பேனெனும் உறுதி உரை கூறி, பொழிலன்பர்களாகிய உங்களையெல்லாம் வணங்கி,

என்றினிக் கரந்தை சார்வேன் என்னியல் தொண்டிற் சேர்வேன்
என்றெலாம் உள்ள மாழ்கி இடம்பெயர் எளிய னாவேன்
சென்றன காலந் தம்மிற் செய்தன பிழைகள் பல்ல
ஒன்றுநன் றுளதாக் கொண்டே உவைபொறுத் தருளு வீரே.

என்று வேண்டி அமைகின்றேன். தமிழ்த்தாய் வாழ்க.

பொழிற்றொண்டன், ஆர். வேங்கடாசலம்.

தமிழ்ப்பொழில், துணர் 8; மலர் 1-2; பக். 1-3.

## அன்பர்கட்கு வேண்டுகோள்

குறித்தவாறு பொழில் மலராது தாழ்த்து வந்ததற்குற்ற குறைகள், கட்டுரைகள் போதிய அளவில் வந்துறாத குறைவும், அச்சு நலமின்மையுமேயாகும். இக்குறைகள் இவ்வாண்டில் நிகழ்வதற்கில. எங்ஙனமெனின், பொழிலிற்கு ஆசிரியர்குழு ஒன்று நாட்டப்பெற்றுளது. இதன்கண் இதுபோது அமைந்துளார் பண்டிதராய திருவாளர்கள் எல். உலகநாத பிள்ளையவர்கள், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், ஆர். வேங்கடாசலம் பிள்ளையவர்கள் எனும் இவர்களாவர். வேறு சில பண்டிதர்களும் இடையறாது கட்டுரை யெழுதிவர உறுதி கூறியுள்ளார்கள். சங்க அன்பர்களால் நிறுவப்பெற்ற கூட்டுறவுப் பதிப்பகத்தில் நமதுபொழில் அச்சிடப்பெறுகிறது. இதன் அச்சு வேலைகளை நடாத்துவார் திருவாளர் ஒளவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள். ஆகவே, இத்தகைய நலங்களால், இனி, நமது பொழில் தாழ்வுறாது உடன்உடன் வெளிவந்து கொண்டிருக்குமென்பது உறுதி.

தமிழ்த்தாயின் தொண்டுகுறித்து, ஊதியத்தை எதிர் நோக்காது தமிழ்த்தொண்டு செய்துவரும் நமது பொழிலை, தமிழன்பர்கள் புரந்து வருதல் ஒப்பில் அறச்செயலாகும். அன்றியும், பொழிலை நாட்டிய சங்க உறுப்பினர்க்கோ, பொழிலைப் புரந்துவருதல் ஒரு கடமையுமாகும். ஆகவே, சங்க உறுப்பினரும் சங்க அன்பரும் பொழிலின் உறுப்பினராகிப் புரந்துவர மிகமிக வேண்டுகின்றோம்.

பொழிற்றொண்டர்.

தமிழ்ப்பொழில், இரண்டாம்துணர் (1926-27) முன்னுரை.

# தமிழிற் பிறமொழிக் கலப்பு

ஒரு மொழி என்பது, சிலர் எண்ணியிருப்பது போன்று, கடவுளாற் படைக்கப்பெற்று மக்கட்கு அளிக்கப்படுவதொன்றன்று ! மொழிநூல் வல்லார் கூறுவது போன்றே ஒரு மக்கட் கூட்டத்தினரால் நாளடைவிற் படைக்கப்பெற்றுத் திரண்டு வருவதொன்றே யாகும். இந்த நிலவுலகிற் பல்வேறு வகைப்படும் நாட்டியற் கைகளையே துணைக்கொண் டெழுதலின், ஒவ்வொரு மொழியும், ஒலியிலும் அமைப்பிலும் வேறுபட்டு நிற்கின்றது. உயிர்ப் பொருள்கள் உயிரில்லாத பொருள்கள் யாவும், தத்தம் இயற்கை கெடுமாறு, மாறுபாடுகள் அடையத் தலைப்படின் அழிந்தொழியும். இங்ஙனமே, எந்த மொழியும் தன் இயற்கை கெடலாவதோர் மாறுபாட்டையடையத் தலைப்படின், அஃதழிந்து போவது ஒருதலையேயாகும். ஆகவே, ஒலியிலும் அமைப்பிலும் முற்றும் வேறுபட்டுநிற்கும் வேறுமொழிக் கலப்பு ஒரு மொழிக்கு அதன் இயற்கை கெட எய்தின், அம்மொழி விரைவில் அழிந்தொழியும் என்பது நாம் நன்கு நினைவில் பதியவைத்தற் குரியதொன்றாகும்.

இங்ஙனமாகவும், நமது தமிழ்மொழியில் 'ஆரியம் ஆங்கிலம்' எனும் இருமொழிகளின் சொற்களை-நமது மொழியின் இயற்கைக்கு முற்றுமாறான அவ்விரு மொழிகளின் சொற்களை — நமது தமிழ்மக்கள் நூல் வழக்கிலும் உலக வழக்கிலும் வரம்பிலாது கொண்டுவந்து புகுத்துகின்றனர். வைகறையிற் றுயில் எழுவது முதல் இரவிற் றுயில்பெறுங்காறும் நாம் உலக வழக்கிற் பேசும் சொற்களிற் கலக்கும் பிறமொழிச் சொற்களைக் கண்டு அளவிட்டுப் பார்க்கின், அம்ம ! தீம்பாலில் நாம் கலந்துண்ணும் நச்சுக்குடிநீர் போன்று, அளவிறந்து நிற்றலைக் கண்டு திடுக்கிடுவோம். இனி நூல் வழக்கில் வந்து புகும் பிறமொழிச் சொற்கள், அம்மம்ம! அளவிட்டுரைத்தல் யாவரான் முடியும்? நெடுங்கணக்குப் பயின்ற சிறார் முதன்முதற் படிக்கும் 'டங்கா டமாரம்' வகுப்பு முதல், முடிந்த படிப்பினவாம் 'பி. ஏ., எம். ஏ.,' வரையுள்ள ஆங்கிலக் கல்லூரிகளின் நூற்களிலெல்லாம் நூற்றிற்குப் பத்திருபதொழிந்த ஏனைச் சொற்களெல்லாம் ஆரிய ஆங்கிலச் சொற்களேயாம். இங்ஙனம் வேற்றுமொழிச் சொற்கள் நம் அரிய தமிழ்மொழியில் எத்தகைய வரம்புமின்றிப் புகுந்து வரும் கடுமையினை உய்த்து நோக்கின், இன்னும் பத்தாண்டினுள், நம் இனிய தமிழ்மொழி, நம் அரிய தமிழ்மொழி, 'ஆரியாங்கில மொழி' யென மாறிவிடும் ஒரு அல்லல் நிலையினை அடைந்து நிற்றல் தெற்றெனப்புலனாகும்.

அந்தோ ! பல்வகைத்திருவும் இழந்து நிற்கும் தமிழ்மக்களாம் நாம் இம்மொழித்திருவினையும் இழந்து என்செய்வோம்! ஏ! தமிழன்னாய் ! நீயே நினது மக்களின் கண்களைத் திறத்தல் வேண்டும்.

இனி, எந்தமொழியும் வளர்ந்து முற்றிய தொன்றாதல் அமையாது என்பதனையும், உலக வளர்ச்சிக்கேற்ப எந்தமொழியும் வளர்ந்துவரல் வேண்டுமெனலையும் யாம் அறியேம் அல்லேம். உலகினில் யாங்கணும் விரிந்துகிடக்கும் நாட்டினரெல்லாம் ஒரு வீட்டினர்போல ஒன்றுபடுதற்குரிய நிகழ்ச்சிகள் பலவாகிய இக் காலத்தில், ஒருமொழியாளர் ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக உணரும் பொருளும் செயலும் அளவற்றனவேயாகும். அவ்வப் பொருளையோ செயலையோ உணரவேண்டின், உணர்த்த வேண்டின், ஒவ்வோர் சொல் வேண்டியதேயாகும். எனினும், அங்ஙனம் புதிதுபுதிதாக உணரும் பொருட்கும் தொழிற்கும் ஏற்ற சொற்களை ஒரு மொழியாளர் தம்மொழியின் இயற்கைக் கேற்பப் படைத்துக்கோடலே தம்மொழியைக் காப்பாற்றும் வழியாகும். அங்ஙனம் படைத்துக்கொள்ள முயலாராய்ப் பிற சொற்களைக் கண்டாங்கு எடுத்துப் புகுத்துவோர் தம்மொழிக்குப் பெரியதோர் தீங்குசெய்வோரே யாவர்.

ஆயின், புதியனவாய கருத்துக்களைப் படைக்குந் திறன் ஒரு மொழிக்கில்லையாயின், அக்கருத்துக்களைத் தரும் பிறமொழிச் சொற்களையே அங்ஙனம் எடுத்தாள்வதன்றிப் பிறிது செயற்பாலதி யாதெனின், நன்று! நன்று! ஒரு கருத்தினைக்கொண்ட ஒரு சொல்லைப் படைக்கும் திறன், ஒரு மொழியாளர்க்கிருப்பின், அத்திறன் அவர்தம் மொழிக்கும் தானேயமையும் என்க. சொற் களைப் படைப்பதென்பது எல்லோரும் எளிதிற் செயக்கிடப்ப தொன்றாகுமா? ஈடும் எடுப்புமற்ற பெரும் புலவர்கள் ஒருங்கு குழீஇப் புதுச்சொற்களை யாக்கிக்கோடல் வேண்டும். இப்பெற்றி யுணராரே புதுச்சொற்கள் ஆக்குவான் புகுந்து, அச்செயல் தம் எளிய முயற்சியிற் கைகூடாமையின், அந்நிலையில் தம் செயலின்மையைத் தம்மொழியின் மேலேற்றி யுரைப்பர்.

இனி, பிறமொழிச் சொற்களைக் கொள்ளுதலும் மரபெனத் தொல்காப்பியர் கூறியுள்ளாரே யெனின், ஆம், அவர் கூறியிருப்ப துண்மையே. சான்றோர் செய்யுட்களில், பிறமொழிச் சொற்களைத், தமிழ்மொழியின் இயற்கைக்கேற்ப ஆக்கிக்கொண்டனவாய மிகச்சில சொற்களைக் கண்டு, அவைகட்கு அமைதி கூறியுள்ளார்.

இதனை, 'இயற்சொல்லானும் செய்யுட் சொல்லாகிய திரி சொல்லானுமே யன்றித் திசைச்சொல்லும் வடசொல்லும் இடைவிராய்ச் சான்றோர் செய்யுள் செய்யுமாறு கண்டு, ஏனைப் பாடைச் சொல்லும் செய்யுட்கு உரியவோ என்று ஐயுற்றார்க்கு, இந்நான்கு சொல்லுமே செய்யுட்குரியன பிறபாடைச் சொல் உரிய வல்ல வென்று வரையறுத்தவாறு' என்ற சேனாவரையர் உரையான் உணரலாகும். எனவே இதன்கண் முன்னரே வந்த மொழிகள் ஒழிய, இனிப் பிறமொழிகள் வரலாகாது என்று வரை யறுக்கப்படுதல் காண்க. இங்ஙனம் வந்தனவற்றை நீக்காது கொள்ள அமைதி கூறலே தொல்காப்பியனார் கருத்தென்பதனை 'அந்நிலத்து வழங்குஞ் சொல்லாகிச் செஞ்சொல்லின் வேறுபட்டுச் சான்றோர் செய்யுளகத்து வருவன நீக்கப்படா' என்னும் தெய்வச் சிலையார் உரையானும் அறிதலாகும். இங்ஙனம் வந்துள சொற்கள் தாமும் அவ்வம்மொழிச் சொற்களாகா; தமிழ் இயலிற் கேற்பப் படைத்துக்கொண்ட தமிழ்ச்சொற்களே யென்பது உரை யாசிரியர் கருத்தாகும். இதனை, 'வடசொல்லாவது வடசொல் லோடொக்கும் தமிழ்ச்சொல் என்றாரால் உரையாசிரியர் எனின்' என்றெழுதிச் செல்லும் சேனாவரையர் மறுப்பான் உணரலாகும்.

இச்சொற்கள் தமிழ்ச்சொற்களாக. பிறசொற்களாக. தொல் காப்பியனார் முன்னுள்ளவற்றிற்கு அமைதி கூறினாராக. அன்றிப் பிறமொழிக் கலப்பினால் தமிழ் மொழி பழுது படாதென்றெண்ணி அதனை விதித்தனராக. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த தொல்காப்பியனார் காலத்துத் தமிழ்நிலை என்னை? அக்காலத்து வந்து விரவற் பாலதாகிய பிறமொழிக் கலப்பின் அளவென்னை? இக்காலத்துத் தமிழ்நிலை யென்னை? இக்காலத்துத் தமிழ் மக்கள் கையாண்டுவரும் வேற்றுமொழிகளின் அளவென்னை? இவற்றை நாம் உய்த்துணர வேண்டுமன்றே. அன்பர்காள்! மிகவிரிந்து பரந்த அத்தொல்காப்பிய நூலினையே ஒருமுறை உற்றுநோக்கின், எழுத்துச் சொற்களேயன்றி மக்களின் உளப்பாங்குகளையும் எடுத்துரைக்கவல்ல பேரியல் நூல் ஒன்று எழுதி முடிப்பதற்குரிய பல்லாயிரக்கணக்கினவாய சொற்கள் நம்தமிழ் மொழியில் அமைந்து கிடத்தலையும், எங்கோ ஒன்றிரண்டு பிறமொழிச் சொற்கள் வந்திருத்தலையுங் காணலாகும். ஆனால், அன்பர்காள்! தமிழ் எழுத்துக்களைப் பயிலும் சிறார் படித்தற்குரிய முதற்பாடம் எழுதி முடித்தற்கும் அந்தோ! எத்துணைய பிறமொழிகளை 'டம்டம்' 'டபடப' என முழக்கம் போட்டுக்கொண்டு வந்து பரப்புகின்றனர். இக்காலத்துத் தமிழ் நூல்கள், தமிழ்ச் செய்தித்தாள்கள் முதலியன நாடோறும் புகுத்திவரும் பிறமொழிக்கலப்பினால் நெருக்குண்டு வரும் நமது தமிழ்மொழியின் நிலையினை, நமது

தொல்காப்பியனார் இன்று காண்பரேல், இக்கலப்பு நம்மொழிக்குத் தீங்கு தருவதன்று என்று உறுதி கூறுவரா? தொல்காப்பியனாரே, காலங்கள் பல செல்லச் செல்ல, மக்களியல்பு, மொழியியல்புகள் மாறுமெனவும், அவ்வக்காலநிலைக்கேற்ப மக்கள் தங்கள் நிலையினையும் மொழியினையும் பேணிக்கொள்ளல் வேண்டுமெனவும் கருதிக் 'கடிசொ லில்லைக் காலத்துப் படினே' என்பது முதலாய விலக்குத் தந்தருளியுள்ளாரே. எனவே, நமது மொழியின் உறுதிபற்றி நாம் இன்று துணியக்கிடப்பதொன்று, நம் அருமைத் தொல்காப்பியனார்க்கும் உடன்பாடாவதே யன்றி மறுதலையாகாதென்க.

இனி, முன்னூல்களிற் பிறமொழிச் சொற்கள் சில பல கலந்திருத்தல், இனி நாம் தமிழ் மொழியினைப் பாதுகாத்துக் கொள்ளற்குத் தடையாகாது. மிகப் பழங்காலத்தினராகிய சங்க காலத்தினர் ஒரோவழி வேற்றுமொழிச் சொற்கள் ஒன்றிரண்டு கலந்திருக்கின்றனர் என்பது உண்மையே. அக்கலப்புமின்றி அவர்கள் நூல்கள் இயற்றியிருப்பது அரிதன்று. பின்னுள்ளோரோ ஒரு வரம்புமின்றி நூற்றுக்கணக்கு, ஆயிரக்கணக்கிற் பிறமொழிச் சொற்களை வேண்டிநின்றனர். இதனாலன்றோ, இப்பின்னோர் காலத்திலேயே நூற்றுக்கணக்காய தனித் தமிழ்மொழிகள் இறந்துபடத் தலைப்பட்டன. இதனைத் தொல்காப்பியத்திற் குறித்த பலசொற்களை வழக்கு வீழ்ந்தன என்றெழுதும் உரையாசிரியர்கள் உரைகளால் உணரலாகும். அந்தோ! இற்றை ஞான்றோ ஆயிரக்கணக்காய மொழிகள் இறந்துபட்டன; இறந்து படுகின்றன. அன்பர்காள்! இங்ஙனம் நம் அருமணிகளாம் பற்பல சொற்கள் மறைந்து போதற்குக் கருவியாயது என்னை? பிறமொழிச் சொற்களாம் பெருவெள்ளமேயன்றோ! தமிழ்ச்சொற்களிருக்கவும் அதனை வேண்டாது பிற சொற்களைக் கையாளின், நாளடைவில் அவையிறத்தற் கென்ன தடையுளது?

இனி, பண்டைத் தமிழாசிரியர்கள் தாம் இயற்றிய அரிய செய்யுட்களைப் பெரிதும் வடமொழி முதலாய பிறமொழிச் சொற்கள் விரவாது இயற்றி யிருத்தலும், எங்கோ ஒன்றிரண்டு வருமாயினும், அவற்றைத் தமிழின் இயற்கையொலி, வடிவுகள் குன்றாதிருக்க அமைத்திருப்பதும் யாங்கணும் காணலாகும் ...

இடைக்காலத்தினராய கம்பர், கச்சியப்பர், சேக்கிழார் போன்ற கல்வியிற் பெரியர்களும், சிற்சில வடசொற்களை ஆங்காங்கு அமைத்துப் பாடியிருப்பினும், தமிழியலைப் பெரிதும் பேணியே

இயற்றியுள்ளார்கள். இப்புலவர் பெருமக்கள் வட சொற்கள் வரலாகாது என்னுங் கருத்திலராயினும், அவைகளைக் கொள்ளலே தமிழ்ச் சிறப்பிற் குரித்தென எண்ணினர் அல்லர் ......

பின்னுள்ளோராய வில்லிபுத்தூரார், குமரகுருபரர், அருணகிரியார் முதலாய புலவர்கள் சொன்னோக்கொன்றே பெரிதென எண்ணியதனோடு அச்சொன்னோக்குகளமைய, வடமொழிச்சொற்கள் இன்றியமையாதன எனவும் எண்ணியோராவர் ......

இப்புலவர்கள் இன்னிசை வண்ணங்கட்கு வடசொற்கள் பெரிதும் இன்றியமையாதனவென எண்ணியோராவர் என்பதன் உண்மை இனிது புலனாகும். எத்தகைய வண்ணங்கள் பாடுவதற் குரிய இன்னிசைச் சொற்கள் நம் இனிய தமிழ் மொழியிலில்லை? எத்தகைய வண்ணங்களும் எளிது பாடற்குரிய தமிழ்ச் சொற்கள் எண்ணிறந்தன வெனலை அப்புலவர்கடம் அரிய செய்யுட்கள் சில வற்றைக் கொண்டே நிலைநாட்டலாகுமே!

அம்மம்ம! இக்காலத்தார் தமிழுமறியாராய் வடமொழியு மறியாராய், எவ்வாற்றாலோ நூலெழுதவோ, அவற்றைப் பள்ளிப் பாடமாக்கவோ அறிவாராய், நம் தமிழுக்குச் செய்துவரும் தீங்குகளே நாம் மிக மிகக் கருதுதற்குரியனவாகும். இனிப் பிழை பட இடமின்றி எழுதியுள்ள இவர் தம் நூற்பிழைகளை எடுத்துக் காட்டல் பயனில் செயலாகும். வேண்டுவார் இத்தகையாரால் எழுதப்பெற்றுப் பள்ளிப்பாடங்களாகக் குறிக்கப்பெற்றுள்ள நூல்களில் ஏதேனும் ஒன்றைக் கண்டுணர்வாராக

ஆங்கிலமொழி பற்பல மொழிகளின் சொற்களையே கொண்டு நிற்பதுபற்றி அதனைக் 'கடன்படுமொழி' எனக்கூறுவர். என்றாலும், அதனுட் செல்லும் பிறமொழிச்சொற்களும் வேற்றுமொழிகளின் எழுத்துக்களுடன், ஒலியுடன் செல்லுகின்றனவா? இல்லை யன்றோ? ஆனால் நம் மொழியில் ஸ், ஷ், ஜ், க்ஷ், ஹ் முதலிய ஆரிய எழுத்துக்களுடன் அவ்வச்சொற்களையே கொண்டுவந்து விடுவதாகவெண்ணி மிருகம், ஸ்வயார்ஜிதம் என்றெல்லாம் எழுதித் தமிழின் அரிய ஒலியினைப் பாழ்படுத்துகின்றனரே. ஐயகோ! செந்தமிழ்ச் சீரியராம் நச்சினார்க்கினியர், வடசொல் தமிழில் வருமிடத்து 'உரப்பியும் எடுத்துங் கனைத்துங் கூறும் வடவெழுத்துக் களின் நீங்கி'த் தமிழொலி பெறல் வேண்டும் என்று குறித்த பொன்னுரையை இவர்கள் அறிவார்களாயின், இங்ஙனம் செய்வார்களா?

இனி, இத்தகைய பிறமொழிக்கலப்பாம் வெள்ளத்தினைத் தடுக்க, யாம் செய்தற்குரியன யாவை எனச் சிறிது எண்ணுவாம். தமிழ்மொழியென வொன்று தமக்கு என்றும் வேண்டியதே என எண்ணும் உண்மைத் தமிழர் ஒவ்வொருவரும், தாம் தாம் பேசுங் காலும் எழுதுங்காலும் தமிழ்ச் சொற்களையே எடுத்தாளல் தமது கடமை யென்று உறுதி கொள்ளல் வேண்டும். சிறார் முதற் கிழவர் ஈறாகவுள்ளார் யாவரும் பிறமொழிக் கலப்பினை எவ்வற்றானும் வேண்டாது விட்டொழித்தலைக் கடனாகக் கொள்ளல் வேண்டும். தமிழறிஞர்கள் தாம் எழுதும் எத்தகைய நூலையும் தமிழ்ச்சொற்களையே கொண்டு எழுதுதல் வேண்டும். தமிழ் மக்கள் வாழ்க்கையில் வந்து புகுந்திருக்கும் எண்ணிறந்த பிறசொற்களில் ஏதேனும் ஒன்றைப் பேசும் போதோ எழுதும் போதோ காணின், உடனே அதனைக்களைந்து அத்தகைய சொல் இனி என்றும் பேச்சிலோ எழுத்திலோ வாராதொழிய மிகு கருத்துறல் வேண்டும். தமிழ்ச் சங்கங்கள் போன்ற தமிழ் நலங் கருதிய கூட்டத்தினர், தமிழிற் பிறமொழிகள் வந்து குவிவதன் இன்னல்களை நீக்கல் தமது கடனாகக்கொண்டு, விரிவுரை, வெளியீடுகள் வழியாக யாவர்க்கும் எடுத்துரைத்துவருதல் வேண்டும். பள்ளிக்கூடத் தமிழாசிரியர்களாவார் தத்தம் மாணவர் கட்குத் தனித்தமிழிற் பேசவும் எழுதவும் ஊக்கிப் பழக்கி வருதல் வேண்டும். மேலும் அங்ஙனம் பேசவும் எழுதவும் திறமையுற்ற மாணவர்கட்கு அத்திறமை குறித்தே பரிசில்கள் தருதல் வேண்டும். தனித்தமிழ் மொழியில் நூல் எழுதுவார்க்குப் பரிசுகள், பட்டங்கள் முதலியன தருதல் வேண்டும். பிறமொழிச் சொற்களின் கலப்பினை உடன்பட்டு நிற்பார் கலப்புமொழிநூல் எதனையும் எவ்வாற்றிலும் புகுதற்கு இடந்தருதலாகாது. சிறப்பாகக் கல்லூரி, பள்ளிக்கூடங் களில், இத்தகையார் எழுதும் நூல்கட்குச் சிறிதும் இடந்தரலாகாது. இங்ஙனம் பல்லாற்றாலும் விழித்துச் செய்யப்பெறுங் கிளர்ச்சிகளே நமது மொழியினைப் பாதுகாப்பனவாகும்.

இனி, ஆரியச்சொல் மிகப்பழங்கால முதலே தமிழிற் புகத் தொடங்கியதனோடு வரவரப் பல்கிவந்து இன்று நம் பேச்சிலும் எழுத்திலும் எண்ணிறந்து நிற்றலின், அந்த நெடிய பழக்கம் துணையாகச் சிற்சில வடசொற்கள், எத்துணைக் கருத்துடன் பேசுவாரையும் எழுதுவாரையும் அயரச்செய்து புகுந்துகொள்ளல் இயல்பேயாகும். மிக்குப்பெருகிவரும் ஒரு வெள்ளத்தினை அணையிட்டுத் தடுத்த காலையும், கீழூற்றாகச் சிறிதுநீர் கசிந்தோடி வரும்; வரினும் அவ்வணை யிறுக விறுக அச்சிறு கசிவும் நின்று விடுதல்போல், இச்சிறுவரவும் நாளடைவிற்

குறைந்து முற்றுமிலா தொழியும். ஆகவே இச்சிறுவரவினையும் ஒரு பெரும் பிழையாகக் கூறிக்கொண்டிருப்பாரையும் பொருள் செய்யாது விடுத்தல் வேண்டும்.

இனி, ஆரியச்சொற்கள் சிலவற்றைத் தமிழ்ச் சொல்லெனக் கூறி, அதற்கென வழக்கிட்டுக் கொண்டிருத்தலும் பயனில் செயலே யாகும். ஆரியச்சொல்லா, தமிழ்ச்சொல்லா என வழக்கு நிகழ்ந்துழி, அவ்விருமொழிகளிலும் வல்லார்கூறுவதே அதற்கு முடிந்தமுடிபாகக் கொள்ளல் வேண்டும். ஆயினும், ஆரியச் சிதைவெனப்படும் பாகதத்தில் நம் தமிழ்ச்சொற்கள் சில சென்று கலந்திருக்கின்றன வாதலின் அவற்றைக்கண்டு, ஆச்சிதைவு மொழியிலிருந்தே அச் சொற்கள் நம் முதன் மொழியாகிய தமிழிற் போந்தன எனக் கூறுவார் உளராயின், அவர் கூற்றுக்களை நாம் ஒப்புதல் இயலாது. இங்ஙனமே, நம் தூயதமிழ்ச் சொற்கள் பலவற்றை ஆரியச் சொற்களெனக் கூறிவரும் பள்ளிப்பாட நூல்களின் உரையாளராம் ஒரு சாரார் உளர். அவர் கூற்றுக்களுஞ் சிறிதும் பொருத்த மில்லாதன வாதலின் அவற்றையும் பொருள் செய்தல் கூடாது.

இனி, ஆரிய மொழியையாதல் ஆங்கில மொழியினையாதல் நம் தமிழர் பயிலாது ஒதுக்கிவிட வேண்டுமென்பது எமது கருத்தன்று. அவ்விரு மொழிகளையும் நன்கு பயின்று அவற்றி லுள்ள அரிய பொருள்களை நம் இனிய தமிழில் ஏற்றுக்கொள்ளுதல் இன்றியமையாததே. எனினும் அவ்வம்மொழிச் சொற்களை, நம் தமிழ்மொழிச் சொற்களின் மறப்பிற்கும் இறப்பிற்கும் கருவியாகக் கொண்டு வந்து புகுத்தலாகா தென்பதே யாம் கூறிவருவதாகும் ...

செந்தமிழ்ச் செல்வியும் நமது தமிழ்ப் பொழிலும் பிறமொழிச் சொற்கட்கு நேரான தமிழ்ச்சொல் வேண்டுவார்க்கு இயன்றவரை உதவி செய்துவரும்.

இனி, தமிழிற் பிறமொழிக் கலப்பின் தீங்கினை நெடுங்காலமாக உணர்ந்து, அக்கலப்புக் கூடாதென எழுதியும், விரிவுரைகள் கூறியும் வரும் நமது மறைமலையடிகளை வாழ்த்துதல் இன்றியமை யாத தொன்றாகும். இப்பெரியார் நம் சங்கத்து 15–16 ஆம் ஆண்டுவிழாத் தலைமை கொண்டு, விழாவின் முடிப்புரை கூறி வருங்கால், தமிழ்மொழியில் பிறமொழிக் கலப்புக்கூடா தென்பதனை மிகமிக வலியுறுத்திக்கூறினர். அடிகள் கட்டுரை யினைக் கேட்டு மகிழ்ந்த தமிழ்மக்கள் அவ்வுரையினைப் பொன்னேபோற்போற்றி அதுமுதல் தூயதமிழில் பேசியும் எழுதியும் வருகின்றனர். பள்ளிச்சிறுவர்கள் உறுதியோ மிக வியக்கத்தக்க

தாகின்றது. தங்கள் தங்கள் பாடங்களில் உள்ள எண்ணிறந்த வடசொற்களைத் தாமே கண்டும் ஆசிரியர்களைக் கேட்டும் உணர்வதிலும், அவ்வவற்றிற்குரிய தமிழ்ச்சொற்களை அங்ஙனமே கண்டுங்கேட்டும் உணர்வதிலும் அவர்கள் காட்டிவரும் ஊக்கம் மிக மிகப் பாராட்டற்குரிய தொன்றாகும். ஆ! தங்கள் பெயரைத் தூய தமிழ்ப் பெயராக மாற்றிக்கொண்ட மாணவரும் சிலருளர். மிக்க இளைஞராய சில சிறார் தத்தம் தாய்மார்களுடன் 'இரசம்' 'சாம்பார்' முதலாய சொற்கட்கீடாகச் சாறு குழம்பு முதலாய சொற்களைக் கூறுமாறு போராடுகின்றனராம். அம்ம ! இத்தகைய இளைய வீரர்களாலன்றோ, நமது தமிழ் மொழியும், தமிழகமும், நம்மொழியும் நம் நாடும் ஆகும். நலம்.

தமிழ்ப்பொழில், துணர்:2 மலர்:11-12,
(அட்சய-மாசி, பங்குனி) பக். 321-33

---

## கட்டுரை எழுதுதல்
### கட்டுரை-வியாசம்

தாய்மொழிப் பயிற்சியே மக்கட்கு இன்றியமையாதது எனவும், அதன் வழியாகவே கலைகள் யாவும் உணர்தல் வேண்டும் எனவும் நமது தமிழ்நாட்டினர் ஒழிந்த எல்லா நாட்டினரும் நன்கு உணர்ந்துள்ளார்கள். இத்தமிழகத்தும், பன்னெடுங் காலமாக முறையான தாய்மொழிப் பயிற்சி யிருந்துவந்தது. அது, தமிழ்மக்கட்குப் பகலோன் (சூரியன்) ஒளிபோன்று அறிவு விளக்கம் தந்துநின்றது. இந்நாட்டில் ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் தோன்றியகாலை, முறைப்பட்ட அப்பழைய பயிற்சி நாளடைவில் குறைந்து மறைந்தொழிந்தது. எனினும், அப்பள்ளிகளில் தாய்மொழிப் பயிற்சியென்றிருந்த சிறுபயிற்சியாவது மாணவர்கட்குக் கட்டாயமாக விருந்தமை யின், அச்சிறு பயிற்சியும் நிலாவொளிபோன்ற தெளிவில்லாத ஒரு ஒளியையாவது காட்டி இயன்ற பயனைச் செய்து வந்தது. பின்னர், அந்தோ ! அச்சிறுபயிற்சியாம் நிலாவினையும் கட்டாயமின்மை என்னும் கரிய கார் (மேகம்) பெரிதும் மறைத்துக் கொண்டது. இதனால், இத்தமிழ்நாட்டில் தாய் மொழிப் பயிற்சி யின்மையாலாம் பேரிருள் மூடிக்கொண்டது. இந்நிலையில் இவ்விருளினைப் போக்கிவிட எழுந்திட்ட சிறு 'விண்மீன்' ஒன்றுண்டு. அதுவே தாய்மொழியிற் *கட்டுரை யெழுதுதல்* என்பதாகும்.

இதழாசிரியர்.

தமிழ்ப்பொழில், துணர்-1 ; மலர்-9, ப. 306.

## தொல்காப்பியம் : சொல்லதிகாரம் : பேராசிரியருரை*

தஞ்சைமாநகரது மீயுயர் சிறப்பின் பொருட்டினவாய் விளங்குவன முதலாம் இராசராசன் எடுப்பித்த பெரியகோயிலும் (இராசராசேசுரம்), சரபோஜி மன்னன் அமைப்பித்த கலைமகள் மன்றமும் (சரசுவதி மகால்) ஆகும். இக்கலைமகள் மன்றத்தே, அமிழ்தினை வென்ற நம் தமிழ்மொழி நூல்களும் ஆரியம், தெலுங்கு, மகாராட்டிரம், ஆங்கிலம் முதலாய ஏனைமொழி நூல்களும் விண்மீனென எண்ணிறந்தன தொகுத்துவைக்கப் பெற்றிருந்தன. நமது பண்டைத்தமிழ் நூல்களாகிய அரிய இலக்கண இலக்கியச் சுவடிகள் பலவும் ஈங்குத் தொகுத்து வைக்கப்பெற்றிருந்தும், அத்தகைய சுவடிகளின் அருமை பெருமைகளை யுணராத நூனிலையத்துப் பண்டை மேற்பார்வை யாளர்கள் தூக்கத்தாலும், அந்நூல்களின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்த புலவர் சிலரது ஊக்கத்தாலும் பலப்பல அரிய நூல்கள் தத்தம் பெயரின்கீழ்ப் பல்வகைய சிறப்பிலா மாற்று நூல்களை திறீஇ, நாளடைவிற் கரந்து வெளியேறிவிட்டன. ஆயினும், தம்மை அரிதிற்றேடிவைத்த மன்னன் பெருமையினைப் போற்றத் துணிந்தன போன்று, வேற்றுப் பெயர் மேற்கொண்டு மறைந்து கிடந்த சிற்சில அரிய சுவடிகளே, இது போதும் எஞ்சியுள்ளன. அங்ஙனம் எஞ்சிய சுவடிகளுள் ஒன்றே ஈங்குக் குறித்த பேராசிரியர் உரையாகும்.

இவ்வுரைச் சுவடி, பக்கற்கு நான்குமுதல் ஒன்பான்வரை வரிகளுள்ள நூற்றைம்பதிற்குச் சற்று மேலாய ஏடுகளைக் கொண்டுள்ளது. சில ஏடுகள் முழுவதும் இன்றியும், சில ஏடுகள் பாதியில் முரிந்தும், சில ஆங்காங்குப் பொடிந்தும் சிதைவுற்று வருதலின், 'நென்னற் கண்ட திருமேனி இன்று பிறிதாநிலைதள (ரும்)' தன்னைக், காண்போர் யாவர்க்கும் உருக்கத்தினைத் தரும் பான்மையது.

இவ்வுரை தமிழகத்துப் பெருப்புலவர் சில்லோர் கண்ணோக்கம் கொண்டு பாராட்டி எழுதப்பெற்றது. தஞ்சைத் தமிழ்க் கிழவ

---

* தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்குப் பழைய உரை ஒன்று இருப்பதைக் கண்ட கரந்தைக் கவியரசர் அதனைப் 'பேராசிரியருரை' என்று எண்ணி, அதன் திறங்களைத் தமிழ்ப்பொழிலில் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வுரை டாக்டர் உ. வே. சா. அவர்கள் கொடுத்த ஓலைச்சுவடிப்படி, 'தெய்வச்சிலையாருரை' எனத் தெரிந்து கரந்தைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்டது. ஈண்டு கவியரசரின் 'தமிழ்ப்பொழில்' கட்டுரை அவர் எழுதியவாறே 'பேராசிரியருரை' என்று தரப் பெற்றுள்ளது.

ராகிய திருவாளர், இராவ்பகதூர், கே. எஸ். சீநிவாச பிள்ளையவர்களும், இச்சங்கத் தலைவர், திருவாளர், உமாமகேசுவரம் பிள்ளையவர்களும் இம்மாபெரும் நூனிலைய மேற்பார்வையினை உற்ற ஒரு சிறுகாலத்தே, தமிழ்மொழிகளிலுள்ள சுவடிகளை ஒருவாறு ஊன்றிப் பார்த்து, நூற்பெயர் விளக்கக்குறிப்பு ஒன்று திட்டம் செய்விக்க முயன்றனராக, அவ்வரிய வேலையினை மேற்கொண்டாரும், கற்று வல்ல பண்டிதருமாகிய திருவாளர், எல். உலகநாத பிள்ளையவர்களால்-'இவ்வுரை மிகச் சிறந்தது, இது அச்சிட்டு வெளியிடத்தக்கவைகளுள் ஒன்றாகும்' என எழுதுமாறு வீறுற்றிருப்பது. இத்தகைய சிறப்பினையுடையதேனும் இந்நூல் தமிழ்ப்புலவர்கள், தமிழ்ச்செல்வர்கள் கருத்துக்கட்கு இலக்காகி, அச்சிடப்பெறும் பேற்றினைப் பன்னெடுங்காலம் எய்தாதிருந்தது.

இந்நூலின் அருஞ் சிறப்பினை யுணர்ந்த இச்சங்கம், இதனை அச்சிட்டு வெளியிடும் எண்ணங்கொண்டு துணிவுற்றது. இந்நூல் அச்சிடற்காம் பொருட் செலவிற்கென ஒரு பெருந் தொகையினை, இச்சங்க உறுப்பினரும், பெரும்புலவருமாகிய திருவாளர் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் விருப்பின்படி, இச்சங்கத்து ஆயுள் உறுப்பினரும், தாய்மொழிப் புரவலர்களின் வழித்தோன்றலுமாகிய பெருந்திருவினர், பலவான்குடி, ராம. கும. சு. குமரப்பச் செட்டியாரவர்கள் தந்துதவினார்கள். உதவவே, சங்கம், வெளியீடுபற்றிய வேலைகளைத் தொடங்கி முடித்தலைச் சிறியேம்பாற் பணித்தது. சங்க அன்பர் சிலர் பல்லாற்றின் உதவினர். திருவருள் ஒருவாறு முற்றுவித்தது.

இவ்வுரைச் சுவடியினைப் பெற்றுப் படியெடுத்தற்கு முயன்ற காலை, விழுமிய பொருள் வளம் சான்று பெருமகிழ் வளித்த இவ்வுரை. கற்றறிஞர் எவராலும் எழுதப் பெறாது, கூலிக்கு எழுதுவோர் எவராலோ எழுதப்பெற்றிருப்பது புலனாயிற்று. ணகர, நகர, னகர வேறுபாடுகளும்; ல, ள, ழ, வேறுபாடுகளும் தேறாது எழுதப்பட்ட விடங்கள் பல. ஒருமை, பன்மை முடிபுப் பிறழ்ச்சிகள் ஆங்காங்குக் காணலாயின. சில விடத்து உரிய நூற்பாவும், சிலவிடத்து உரைப் பகுதிகளும் இலவாகவும், சில விடத்து அவை நிலைமாறியும் காணலுற்றன.

இதன் படியென நூனிலையாளர் எழுதிவைத்திருப்பதொன்று உளதேனும், அது ஆங்காங்கு மிக்கும் குறைந்தும், பேராசிரியர் உரையும், படியெழுது மோராசிரியர் உரையும் கலந்ததோர் கலவையணி நூலாக விளங்கியது. இப்பேராசிரியர் உரை ஏடுகள்

வேறெங்கேனும் உளவாவென அறிய இயன்றவா முயன்றும் பயனெய்திற்றின்று. மேற்கூறிய நிலையினதாகிய இவ்வேடுதானும் சின்னாட்டாழ்த்தின் பயன்படாததாகும் ஏதப்பாட்டினையஞ்சி, இயன்றவாறு கூர்ந்து நோக்கி நோக்கிப் படியெடுத்துக்கொண்டு, சொல்லதிகாரத்து ஏனையுரைகளொடு ஒருவாறு ஒப்புநோக்கி யாய்ந்து அச்சிடலாயிற்று.

சொல்லதிகாரத்து ஏனைய உரைகளாய இளம்பூரணம், சேனாவரையம், நச்சினார்க்கினியம் என்னும் உரைகளொடு இதனை ஒப்பு நோக்குங்காலை, இளம்பூரணர் உரையைப் பெரிதும் பின்தொடர்ந்து சேனாவரையரும், இவரைப்பெரிதும் பின்தொடர்ந்து நச்சினார்க்கினியரும் உரையெழுதுதல் போலாது, இஃது அவற்றுள் எதன் தொடர்பும் ஒரு சிறிதும் இலதாகித் தனி நெறிச் செல்லும் தகவுடையதோருரையாகத் தோன்றிப் பெரு வியப்பினை எய்துவித்தது. எனவே, இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க் கினியர் உரைகளை ஒருவகையாகவும், இதனை வேறு ஒரு வகை யாகவும் கொள்ளுதல் வேண்டிற்று. மேலும் நுணுகி நோக்கிய விடத்து ஒரோவிடங்களில், இளம்பூரணர் கொள்கைகளை இப் பேராசிரியர் மறுத்துச்சொல்லுதலும், இவர் தம் கொள்கைகளைச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் ஒரோவழி மறுத்துச் செல்லுதலும் ஒருவாறு புலனாயின. இவை கொண்டு, இப் பேராசிரியர் உரை இளம்பூரணர் உரையின் பிந்தியதெனவும், ஏனையோர் உரைகட்கு முந்தியதெனவும் ஒருவாறு துணிதற்கு இடமுண்டாயினும், ஏனையோர் உரைகளைச் சுட்டுமிடத்து, ஒரோவழி அவர்தம் பெயரையும் சுட்டி மறுத்தேகும் வழக்கமுடைய சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் ஓரிடத்தாலும், இப் பேராசிரியர் பெயரைச் சுட்டிமறுக்காமையானும், வேறு சில பொருட்டுக்களாலும் அத்துணிபினை முடிந்த முடிபெனக் கொள்ளுதல் இதுபோது இயலாததாயிற்று.

இளம்பூரணர் முதலியோர் ஒருமித்துக் கொண்ட ஓத்துக்களில்* இப்பேராசிரியர் பல விடங்களில் மாறுபடுவர். அவர்தாம் வேறு வேறாகக்கொண்டன சில ஓத்துக்களை இவர் ஒன்றாகக் கொள்வர். அவர்கள் ஒன்றாகக் கொண்டன சிலவற்றை இவர் தனித்தனியாகக் கொள்வர். ஒன்றின் ஓர் பகுதி ஏனை யொன்றினோடு இணைந்து நிற்கும் வேறுபாடு, இவ்விருவகை உரைகளிற் சிலவிடங்களிற் காணப்பெறும். சில ஓத்துக்களின் முறையும் இவ்விருவகையினர்

* நூற்பா, இவண் 'ஓத்து' என்று ஆளப்பெற்றுள்ளது.

பாலும் வேறுபடும். ஓத்துக்களின் சொற்களினும், சொற்றொடர்களினும் பல்வகைய வேறுபாடுகள் உள. எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு கீழே காட்டப் பெறுகின்றன.

"ஒருபெயர்ப் பொதுச்சொ லுள்பொரு ளொழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்"
இளம்பூரணர் முதலியோர் உரை-கிள-சகூ.

"பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம்
மயங்கல் கூடா வழக்கு வழிப்பட்டன" கிள. ருO.

"ஒரு பெயர் ... ... ... ... ... தலைமையும் பன்மையும்"
பேரா-கிள-சஎ.

"உயர்திணை மருங்கினும் ... ... ... ... ... வழிப்பட்டன"
கிள-சஅ.

"செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்தும் உரிய வென்ப;
அவற்றுள்
தருசொல் வருசொல் லாயிரு கிளவியும்
தன்மை முன்னிலை யாயி ரிடத்த;
ஏனை யிரண்டு மேனை யிடத்த"

இவற்றை இளம்பூரணர் முதலாய மூவரும் தனித்தனி மூன்று ஓத்துக்களாகக் கொண்டனர். பேராசிரியர் யாவையும் ஒன்றாகக் கொண்டனர்.

"உகப்பே யுயர்தல் உவப்பே உவகை" (உரியியல்)

இங்ஙனம் இளம்பூரணர் முதலியோர் ஒன்றாகக்கொண்ட இதனைப் பேராசிரியர் இரண்டாகக் கொண்டனர். "அதுவென் வேற்றுமை" என்னும் ஓத்தும் "ஆறன் மருங்கின்" என்னும் ஓத்தும் இவ்விருவகையாளர்கள் வெவ்வேறிடங்களில் வைத்துளார்கள்.

இனி, இவ்விருவகையினர் உரைவேறுபாடுகளும் காணுதற்கு வியப்பைத்தருவன வாகிப் பலவகையினவாகும். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு காட்டப் பெறுகின்றன.

*விடை வகைகள்* : இளம்பூரணர், வினாவெதிர் வினாதல், ஏவல், உற்ற துரைத்தல், உறுவதுகூறல், உடன்படுதல் எனவாறாம் என்பர். சேனாவரையர் இவையாவும் செவ்வன் இறையும் இறை

பயப்பதுமென இரண்டேயாமென்பர். நச்சினார்க்கினியர் இவ்விரு வகையே மேற்கொண்டு, இவற்றுள் இறைபயப்பது - வினாவெதிர் வினாதல், ஏவுதல், மறுத்தல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், உடன்படுதல், சொற்றொகுத்திறுத்தல் சொல்லாதிறுத்தல் என எண்வகைத்து என்பர். பிந்திய நூலுரையாளர்களும் பெரிதும் மேற்கூறிய வகைகளையே தொடர்ந்து சொல்வாராயினர். பேராசிரியரோ பின்வருமாறு எழுதுகின்றனர்: அச்செப்பு நான்கு வகைப்படும். துணிந்து கூறல், கூறிட்டு மொழிதல், வினாவி விடுத்தல், வாளாதிருத்தல் என. துணிந்து கூறலாவது தோன்றியது கெடுமோ என்றவழிக் கெடும் என்றல். கூறிட்டுமொழிதலாவது செத்தவன் பிறப்பானோ என்றவழிப் பற்றறத் துறந்தானோ பிறனோ என்றல். வினாவிவிடுத்தல் என்பது முட்டை மூத்ததோ பனை மூத்ததோ என்றவழி, எம் முட்டைக்கு எப் பனை யென்றல். வாய்வாளாமையாவது ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றார்க்கு, உரையாடாமை. இங்ஙனமாய இவ்வுரையினைப் பார்த்த காலை *மணிமேகலை*யின் வரிகள் (காதை 30 : 235) நினைவிற்கு வருதலொடு, ஏதோவோர் நூலோடு செல்லும் இவர் தம் உரையுயர்வுந் தோன்றுகின்றது.

காலம் என்பது முன்னும் பின்னும் நடுவும் ஆகி என்றும் உள்ளதோர் பொருள், உலகம் என்பது மேலும் கீழும் நடுவும் ஆகி எல்லாவுயிருந் தோற்றுவதற்கு இடமாகிய பொருள். உயிர் என்பது சிவன். உடம்பு என்பது மனம், புத்தி, ஆங்காரம் ...... மாத்திரையாகி வினையினாற் கட்டப்பட்டு எல்லாப் பிறப்பிற்கும் உள்ளாகி நிற்பதோர் நுண்ணிய உடம்பு: மூலப்பகுதி எனினும் ஆம். பாலவரை தெய்வம் என்பது ஆணும் பெண்ணும் அலியும் ஆகிய நிலைமையை வரைந்து நிற்கும் பரம் பொருள். வினை யென்பது ஊழ்.பூதம் என்பது நிலம். சொல்லென்பது எழுத்தினான் இயன்று பொருள் உணர்வது. அச்சொல்லினான் இயன்ற (மந்திரமும் ஆம்) விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று. இந்நூல் செய்தான் வைதிக முனிவன் ஆதலின் சொல்லென்பது வேதம் என்று கொள்ளப்படும் (கிள-ருரு).

மன்னாப் பொருளும் அன்ன வியற்றே (கிள-௩௨)

இ-ள். பொருந்தும் பொருளும் பொருந்தாப்பொருளும் உறழ வேண்டுமிடத்தும் பொருந்தும் பொருள் கூறுமிடத்தும் உம்மை கொடுத்துச் சொல்ல வேண்டும் எ-று.

வேதாகமத் துணிவு ஒருவர்க்கு உணர்த்துமிடத்து உலகும் உயிரும் பரமும் அனாதி. பதியும் பசுவும் பாசமும் அனாதி என

வரும். உலகும் உயிரும் பரமும் பசுவும் பொருந்தும் பொருள் ஆனவாறும், பாசமும் பதியும் இவற்றோடு பொருந்தாப் பொருளானவாறும் காண்க.

### பன்னிரு நிலமாவன

வையையாற்றின் ...... நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, கருங்குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதை நாடு, பூழி நாடு, மலாடு, அருவா நாடு, அருவா வடதலை என்ப. இவை செந்தமிழ் நாட்டகத்த செந்தமிழ்* நாடென்றமையால், பிறநாடாகல் வேண்டுமென்பார் உதாரணங் காட்டுமாறு :- ‡'கன்னித் தென்கரைக் கடற் பழந்தீபம் கொல்லங் கூபகஞ் சிங்கள மென்னும் எல்லையின் புறத்தவும் கன்னடம் வடுகம் கலிங்கம் தெலிங்கம் கொங்கணம் துளுவம் குடகம் குன்றகம் என்பன குடபா லிருபுறச் சையத்துடனுறைபு கூருந், தமிழ்திரி நிலங்களும் முடியுடை மூவரிடு நிலவாட்சியின் அரசு மேம்பட்ட குறுநிலக் குடிமிகள் பதின்மருடனிருப்பிருவருமாகிய பன்னிருவர் அரசரும் படைத்த பன்னிரு தேயத்தினும், தமிழ்ச் சொல்லாதற்கு விருப்புடையன என்றமையானும் ''தமிழ் கூறு நல்லுலகத்து, வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின், எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி'' என நிறுத்துப் பின்னுஞ் ''செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு'' என ஓதியவதனாற் சிவணிய நிலமாவது எல்லை குறித்த நிலத்தைச் சார்ந்த நிலமென வேண்டுதலானும், பன்னிரு நிலமாவன :-

குமரியாற்றின் தென்கரைப்பட்ட பழந்தீபமும், கொல்லமும், கூபகமும், சிங்களமும், சையத்தின் மேற்குப்பட்ட கொங்கணமுந் துளுவமுங் குடகமுங் குன்றகமும், கிழக்குப்பட்ட கருநடமும் வடுகும் தெலிங்கும் கலிங்கமும் என்று கொள்ளப்படும். (தமிழ்ப் பொழில், துணர்: க, மலர்: 4, குரோதன ஆடி, பக். 123-30)

இவ்வுரையாசிரியர் தாம் கூறப்புகும் பொருளினைச் சிறார்க்குக் கூறுவதுபோல் மிக எளிதாக எடுத்துக்கூறும் நலம் மிளிர்வது ஆங்காங்குக் காணலாகும். எடுத்துக்காட்டாக ஒன்று காட்டுமுன் அதன் இடம் விளங்க இடையிற் சில சேர்க்கின்றாம்.

வேற்றுமைத்தொகை முதலிய தொகைகள்-இரண்டும் பலவும் ஆய சொற்கள் இடையில் அவ்வவ்வுருபுகள் தொக்கு நிற்க வரப்

---

* 'சேர்ந்த' விடுபட்டுள்ளது போலும்.

‡ மயிலைநாதர்—161 பக்கத்துச் சிலபாட வேறுபாட்டுடன் உள்ள இது அகத்தியம் எனக் காணப்படும்.

பெறுவனவாம் என்பது ஒரு சார் உரையாசிரியர் கொள்கை. எனவே இவர்தம் கருத்து அத்தொகைகள் ஒன்றின் மேலாய சொற்கள் விட்டிசைத்து நிற்பன; ஒரு சொல்லல்ல என்பதாயிற்று. இனி, மற்றொருசாரார் வேற்றுமை முதலிய பொருள்களின் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்பட்டுத் தம்முள் இயைந்து ஒருசொல் நீர்மைத்தாகி வருவனவே வேற்றுமைத் தொகை முதலியனவாம் என்பர். எனவே, இவர் தம் கருத்து இத்தொகைகள் இரண்டு சொல்லாக விட்டிசைப்பனவல்ல; ஒரு சொன்னீர் மைய என்பதாயிற்று. இவ்விருசார் உரையாளருள், நம் பேராசிரியர் பிற்கூறிய கொள்கையினராவர்.

அதுபற்றி அவர்தம் உரை சொல்லுமாறு :-

“தொகைச் சொல்லாவது பொருளுணர்த்துஞ் சொல்லாயினும், தொழிலுணர்த்துஞ் சொல்லாயினும் இரண்டுசொல் விட்டிசைத்து நில்லாது ஒட்டி நிற்பது. இஃது ஒட்டுப் பெயர் என்னுங் குறியும் பெறும்”.

“வேற்றுமையியல” என்றதனால் வேற்றுமைகட்கு ஓதிய செயப்படு பொருள் முதலாக இடம் ஈறாக வரும் பொருண்மைக்கண் தொகுஞ்சொல் வேற்றுமைத் தொகையாம் என்று கொள்க. முதல் வேற்றுமை பெயர்ப் பயனிலை கொள்வழியும் விட்டிசைத்தே நிற்றலானும், எட்டாவது விரிந்து நிற்றலானும் இவையிற்றை யொழித்து ஏனைய தொகுமென்று கொள்க”.

“அவை தொகுமாறு :- படையைப் பிடித்த கை ... ... ... தாயொடுகூட மூவர், கடிசூத்திரத்திற்கு வைத்த பொன், வரையி னின்றும் வீழாநின்ற அருவி, யானையது கோடு, குன்றத்துக் கண் வாழாநின்ற கூகை என்பன-படைக்கை ... ... குன்றக் கூகை எனத் தொகும். நிலத்தைக் கடந்தான் ... ... ... குன்றத்துக்கண் இருந்தான் என்றவழி, இறுதி நின்ற (தொழிற் சொல்) தொழி லுணர்த்தாது. அது செய்தார்க்கும் பெயராகி வந்துழி, நிலங் கடந்தான் ... ... ... ... குன்றத் திருந்தான் என இரண்டு பெயரும் ஒட்டி ஒரு சொல்லாகிவரும் ... ... ...”

அஃதேல், இவ்வாறு வருவன உருபுதொகையென அடங்காவோ வெனின், ஆண்டு அவ்வேற்றுமைகட்கு ஓதிய வாய் பாட்டால் தொழிலோடும் பெயரோடும் முடிவுழி, உருபு மாத்திரம் தொக்கு இரண்டு சொல்லாகி நிற்கும்; ஈண்டு ஒரு சொல்லாகிவரும்”.

இனி, எடுத்துக் காட்டப் புக்கது வருமாறு :

“அஃது அற்றாக, உலக முவப்ப ... ... ... வாணுதல் கணவன் என்பது பல சொல்லாகி வந்து கணவன் என்பதனோடு

முடிந்து கிடத்தலான், இரண்டு சொல் ஒரு தொகையாம் என்றல் பொருந்தாதால் எனின், எவ்வாறு வரினும் இரண்டு சொல்லாகி வந்தல்லது ஒட்டுப்படாதென்று கொள்க. அஃதாயவாறு என்னையெனின், பூந்தொடை போலக்கொள்க. அஃது இரண்டாயவாறு என்னையெனின், முற்பட இரண்டு பூவை எடுத்து ஒன்றாகக் கட்டும். அதன்பின் அவ்விரண்டும் ஒன்றாகி நின்ற தொடையோடே கூடப் பின்னும் ஒரு பூவையெடுத்துக் கட்டும். அதன்பின் அம்மூன்று பூவும் ஒன்றாகக் கட்டப்பட்ட தொடையோடே பின்னும் ஒரு பூவை எடுத்துக்கட்டும். அவ்வாறு கட்டப்பட்ட தொடைகளைப் பின்னும் இரண்டொன்றாகக் கோத்து ஒன்றாக்கும். இவ்வாறே எல்லாப் பூவும் இரண்டொன்றாக இணைத்ததாம். சொற்றொடையும் ஒட்டுப்படுங்கால் அவ்வாறு வருமென்று கொள்க.

''உலகமென்பது உலகத்துள்ளார்க்குப் பெயராகி உவப்ப என்னும் செயவென்னெச்சத்தோடு முடிந்தது. வலனாக என்னும் எச்சத்துக்கண் ஆகவென்பது செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. தொக்குநின்ற காலத்தும் அதற்கு இயல்பு முற்பட்ட நிலைமை யென்றுகொள்க. என்போலவெனின், வாலுஞ்செவியும் இழந்த ஞமலியைப் பின்னும் ஞமலியென்றே வழங்கினாற்போல, உவப்ப வலனாக என்னுஞ் செயவென்னெச்சமும், ஏற்பு என நிகழ் காலங்குறித்த செயவென்னெச்சமும் திரிதரு வென்னும் பெயரெச்சத்தோடு முடிந்தன. பலராலென்னும் மூன்றாம் வேற்றுமைப் பெயர் உருபு தொக வருதல் என்னும் இலக்கணத்தால் தொக்குப் பலரென நின்றது. அது புகழப்பட்ட என்பதற்கு அடையாகி நின்றது. அடையெனினும் விசேடணம் எனினும் ஒக்கும். புகழப்பட்ட வென்னும் பெயரெச்சம், உண்சோறென்றாற் போலப் பொருண்மேல் வந்து வினைத்தொகையாகிப் புகழ் ஞாயிறென ஒட்டி ஒரு சொல்லாகி நின்றது. ஞாயிற்றை யென்னும் உருபு தொக்கு நின்றது. கடலின்கண்ணென்னும் உருபு தொக்கு நின்றது. கண்டாங்கு என்பது கண்டாற்போலும் என்னும் உவமப் பொருள் உணர நின்றது. இத்துணையும் உணர்த்தப் பட்டது-உதய ஞாயிறு போல என்னும் பொருண்மை. ஓவற என்பது-ஓவு ஒழிவு, அற என்பது இல்லையாக என்னுஞ் செயவெனச்ச வாய்பாடு. அதற்கு ஓவு என்பது அடையாகி நின்றது அறவென்பது இமைக்கும் என்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது. சேணின்கண் என்பது சேண் என உருபு தொக்கு நின்றது. அது விளங்கும் என்பதற்கு அடையாகி நின்றது. அவிர் என்பது விளக்கத்தின்மிகுதியைக் குறித்து வந்து ஒளி

யென்னும் பெயரோடு வினைத் தொகையாகி, அவிரொளியென ஒரு சொல்லாயிற்று. அது விளங்கு என்பதனோடு ஒட்டி வினைத் தொகையாகி, விளங்கவிரொளி யென ஒரு சொல்நீர்மைப்பட்டது. அஃது இமைக்கும் என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று. உலகம் என்பது முதலாக இத்துணையுங் கூறப்பட்டது ஞாயிறு போல் விளங்கும் ஒளியென ஒளிக்கு அடை கூறுதலான், அவ் வொளியோடே எல்லாச் சொல்லும் முற்றி நின்றன. உறுநரை யென்பது உறுநர் என உருபு தொக்கு நின்றது. தாங்கிய என்பது பெயரெச்சம். அதற்கு உறுநர் என்பது அடையாகி நின்றது. மதன் என்பது வலி. அது மத என்னும் உரிச்சொல் ஈறுதிரிந்து நின்றது. மதனை என்னும் ஐகாரம் தொக்கு நின்றது. நோன்மை பொறை. திருவடியடைவார் பலராதலின், அவரெல்லாரையும் பொறுக்க வல்ல தாளென்னும் பொருண்மைத்தாகி, நோன்றாளென வேற்றுமைத் தொகையாகி ஒரு சொன்னீர்மைப்பட்டது. அது மதனுடை நோன்றாள் என அடையடுத்து உறுநர்த்தாங்கிய என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று. செறுநரை என்பது செறுநர் என உருபு தொக்கு நின்றது. தேய்த்த என்பது பெயரெச்சம். அதற்குச் செறுநர் என்பது அடையாகி நின்றது. செல் என்பது மழை. உறழ்தல் என்பது ஒத்தல். அது தடக்கை என்பதற்கு உவம நிலையின் அடையாகி நின்று, செல்லுறழ் தடக்கையென்று ஒரு சொன்னீர்மைப்பட்டது. அது தேய்த்த என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று. மறு என்பது குற்றம். இல் என்பது இல்லாமை. குற்றமில் கற்பெனக் கற்பிற்கு அடையாயிற்று. வாள் என்பது ஒளி. அது ஒளிநுதல் என அடையடுத்து நின்றது. 'சினையிற்கூறு முதலறி கிளவி' யாகி அதனையுடையாட்குப் பெயராகி நின்றது. அது மறுவில் கற்பின் வாணுதல் எனப் பண்புத் தொகையாகி ஒரு சொன்னடையாயிற்று. அது கணவன் என்னும் பெயரோடு கிழமைப் பொருட்டாகிய ஆறாம் வேற்றுமைத் தொகையாகிய மறுவில் கற்பின் வாணுதல் கணவன் என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகிய ஒரு பெயராயிற்று. அது செல்லுறழ் தடக்கைக் கணவனென இரண்டாம் வேற்றுமைத் தொகையாகி ஒரு சொன்னீர்மைப்பட்டது. அது மதனுடைய நோன்றாள் என்பதனோடும் அவ்வாறே ஒட்டி நோன்றாட்டடக்கைக் கணவன் என ஒரு சொன்னடையாயிற்று. அது சேண் விளங்கவிரொளி என்பதனோடும் அவ்வாறே யொட்டிச் சேண்விளங் கவிரொளி நோன்றாட்டடக்கைக் கணவன் என ஒரு சொன்னடையாயிற்று. இவ்வாறு சொன்னிலைமை யுணர்க. இரண்டு சொல்லே தொகையாகியவாறு கண்டு கொள்க. 'எல்லாத் தொகையும் ஒருசொன்னடைய' என்றோதி னமையானும் ஆசிரியன் கருத்திதுவென்று கொள்க''.

உரையாசிரியர் சிலர் தாம் உரைக்கும் நூலில் தமக்கு ஐயப்பாடாதல், அறியாமையாதல் காட்டியெழுதல் அருமையினும் அருமையாகும். அங்ஙனம் எழுதுவாரிலரேனும் அவர் தாம் வலிந்து பொருள்கூறும் இடங்களில் அவர்தம் ஐயப்பாடோ, விளங்காமையோ படிப்பார்க்குப் புலனாகாதிராது. நெடுங்காலத்தின் பின்னர் உரைவகுக்கப்புக்க உரையாசிரியர், இடைப்பட்ட கால நெடுமையால் மறைக்கப்பட்ட பொருளினை உணரலாகாமையின், முதனூலாசிரியர்களின் கருத்தினை ஒரோவழி அறியாமை பற்றி அவர்கட்கு வரக்கடவதோர் இழுக்கென்னை? ஒரு கோட்பாட்டினை மனத்தில் நிறீஇ, அதற்கேற்ப உரை உரைத்துச் செல்லுங்காற் றோன்றும் வலிந்த உரைகளும், ஒரு நூற்பா, இயல் முதலியவற்றோடு பின்னிற்பனவற்றிற்கு உரைக்கப்புகும் இயைபுரைகளுள் ஒரோவழிக்காணும் மெலிந்த வுரைகளும், வேண்டா வினாக்களைத் தாமே யெழுப்பி விடையிறுக்கப்புக்கு இடர்ப்படும் இடங்களிற்காணும் பொருந்தாவுரைகளும்' இன்னோரன்ன வேறு பிற திருந்தாவுரைகளும் எப்புலத்தோரும் போற்றும் செப்பமுடைய சீரிய உரைகள் சிலவற்றில் அருகிக் காண்பதனை நடுநிலை அறிஞர் ஒப்புவர். நமது பேராசிரியரோ ஒரோவழித் தமக்கெய்தும் ஐயத்தினை ஐயமாகவும், விளங்காமையை விளங்காமையாகவும் வைத்துரைக்கும் நடுநிலையழகு மிக, மிகப் போற்றற்குரியதாகும். ஒன்று வருமாறு:

“அஃதேல், வினைச்சொற்கள் முற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும் என மூவகைப்படும். அவற்றுட் பெயரெச்சம் வினையெச்சம் என்பன இத்தன்மைய என்று எடுத்தோதி முற்றுச் சொல்லாவது இத்தன்மையதென்று ஓதிற்றிலர். அதற்கு இலக்கணம் யாங்குப்பெறுதும் எனின், எச்சவியலுட் பெறுதும். வினைக்கு இன்றியமையாத முற்றினை ஒழிபியல் கூறுகின்றுழிக் கூறியவதனாற் பெற்ற தென்னையெனின், அஃது எமக்குப் புலனாயிற்றின்று’’.

‘ இவற்றுள், கூபகமும்,கொல்லமுங் கடல் கொள்ளப் படுதலின் குமரியாற்றின் வடகரையைக் கொல்லமெனக் குடியேறினர்போலும்’’.

இங்ஙனம் உரையெழுதல் தொல்லுரையாசிரியர்களியல்பே யெனலை ஓர் எடுத்துக்காட்டாற்காட்டுதும். இளம்பூரணம்:-

‘‘ உவமைத் தொகை யென்று காட்டினவெல்லாம் வேற்றுமை புருபுபற்றியன்றி வாரா : என்னை? துடிநடுவென்றவிடத்துத் துடியை யொக்கும் நடுவென இரண்டனுருபுபற்றி வருதாதலின்; உவமத்தொகை யென்ற தென்னையெனின், அதற்கு ஒரு சாரார்

சொல்லுவது :- துடி நடுவென்புழி உவமையுருபு வேற்றுமையுருபு என இரண்டுந் தொக்கவேனும், துடிபோலும் நடுவெனத் தொகைக்கு உமைப்பொருளே சிறப்புடைத் தாகலின், அது தொகை யென்பது; ஐகாரவுருபு அவ்வுவம வுருபினை நோக்கி வந்ததென்ப என்னை ? துடியை நடுவாகக் கொள்ளாதாகலின் என்பது. இனியதற்கு மெய்யுரை வல்லார் வாய்க்கேட்டுணர்க ''.

இவ்வுரையாளர் சைவநன்னெறி நூல்களிலும் சித்தர்கள் நூலினும் மிக்கபயிற்சியும், உறுதியும் உடையார்போலும். சில எடுத்துக் காட்டுக்களில் இவ்வுண்மை புலனாகும். ''மந்திரம் என்பது பிறரறியாமல் தம்முள்ளார் அறிய மறைத்துக் கூறுஞ்சொல் அதன்கண் ஆகுவன, உலகினுள் வழங்குகின்ற பொருட்குத் தாம் அறிகுறியிட்டு ஆண்டுவருங் குழூவின் வந்த குறிநிலை வழக்கு. அது வெளிப்பட்ட சொல்லால் உணரும் பொருட்கு மறைத்துப் பெயரிடுதலும், எழுத்திற்குப் பிறபெயரிட்டு வழங்குதலும் என இருவகைப்படும். இவையும் பொருள் வேறுபடுத்தி வழங்குதலின் இசை யெச்சமாயின. அவற்றுள், பொருட்கு வேறு பெயரிட்டன :- வண்ணக்கர் காணத்தை நீலம் என்றலும், யானைப்பாகர் ஆடையைக் காரை என்றலும் முதலாயின. எழுத்திற்கு வேறு பெயரிட்டு வழங்குமாறு :- மண்ணைச் சுமந்த வன்றானும் வரத ராசன் மகன்றானும், எண்ணிய வரகாலிமூன்று மிரண்டு மரமும் ஓர்யாறும், திண்ணமறிய வல்லார்க்குச் சிவகதியைப் பெறலாமே. இதனுள் மண்ணைச்சுமந்தவன்-ந, வரதராசன் மகன்-ம, வரகாலி மூன்று-சி, இரண்டுமரம்-வா, ஓர்யாறு-ய எனக்கூற, நமசிவாய எனப் பொருளாயிற்று''. இது சித்தர் பாடல் போலும்.

இங்ஙனம் பல்வகைப்படும் இவ்வுரைச் சிறப்பினையும், இவர் தம் கால ஆராய்ச்சிக்குரிய குறிப்புக்களையும், ஓய்வு பெறுந்தோறும் எழுதிவரலாமென எண்ணியுள்ளேம்.

இதழாசிரியர்.

(தமிழ்ப்பொழில், துணர் : 1 மலர் : ரு, குரோதன - ஆவணி, பக். 163-69.)

---

பழந்தமிழ்ச் சங்கப் புலவர்களை நாம் நினைப்பதற்குக் காரணர்களாகத் தற்காலத்தில் வாழ்ந்தவர்களுள் கரந்தைக் கவியரசு, அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் ஆவார்கள். அவரது பிரிவு தமிழார்வமுடையவர் களுக்கு ஓர் எச்சரிக்கை.

—குன்றக்குடி அடிகளார்.

கரந்தைக் கவியரசர் நினைவு மலர், ப. 3

---

# நற்றாயுக், செவிலித் தாயும்

(க)

(நற்றாய்-பெற்றதாய், செவிலித்தாய்-வளர்க்குந்தாய் இங்கே நற்றாய்-நமது தாய் நாடு. செவிலித்தாய்-ஆங்கிலக் கல்லூரி.)

*நற்றாய் :-* அம்மா! வருக, வருக! நீங்கள் உலகமெங்குஞ் சென்று ஆங்காங்கு என்னைப் போலும் எளிய தாய்மார் பெற்ற பிள்ளைகளை அன்புடன் வளர்த்துத் தந்து பெரும் புகழ் பெறுகின்றவர்கள் என்பது கேட்டறிவேன். எனது இப்பிள்ளையையும் வளர்த்துத் தருவீர்களாயின் அந்நன்றியை என்றும் மறவேன்.

*செவிலி :-* அம்மா! அவ்வண்ணமே செய்வேன். இப்பிள்ளைக்கு ஐந்து, ஆறு வயதிருக்கும் போலும்.

*நற் :-* ஆம், ஐந்து ஆண்டும் நான்கு திங்களும் ஆயின.

*செ :-* நல்லது, இப்பிள்ளையின் இப்போதைய பழக்க வழக்கங்களை அருள்கூர்ந்து கூறுவீர்களா?

*நற் :-* அம்மா! இவன் ஓர் அருமைக்குழந்தை. 'சாமி' என்றால் தலைகால் கொள்ளா மகிழ்ச்சி. தெருவில் சாமி வருகிறது என்றால் பாற்கஞ்சி குடித்துக் கொண்டிப்பினும் வைத்துவிட்டு ஓடிவிடுவான். தெருவில் பிள்ளைகளெல்லாம் தங்களுக்கு மண் வீடுகள் கட்டி விளையாட, இவன் சாமிக்குக் கோயில் கட்டுவான். மற்றப் பிள்ளைகள் பொம்மைகளைப் பெண்மாப்பிள்ளைகள் என்று வைத்து விளையாட, இவன் அம்மை, அப்பன் என்று வைத்து அவைகளுக்குப் பூசனை செய்வான். அம்மா! பெரியோர்களைக் கண்டால் அவர்களை வணங்குவதும், அவர்கள் ஏதேனும் கட்டளையிடின் அதனை விருப்போடும், பணிவோடும் செய்து முடிப்பதும் வியப்பாக விருக்கும். அம்மா! விடியற்காலையில்-எழுந்தது முதல் இரவு-ஐந்து நாழிகைக்குள் அவன் தூங்கும்வரை அவன் பழக்க வழக்கங்களை ஒரு நாளைக்காவது இங்கிருந்து நீங்கள் பார்ப்பீர்களாயின், மிக்க வியப்பு அடைவீர்கள். அம்மா! இவன் அறிவோ, கூர்மையான அறிவு. இளகிய மனம். சிறந்த குணம் ......

*செ :-* மிக்க மகிழ்ச்சி இத்தகைய பிள்ளைகளை வளர்த்தாற்றான் பெருஞ்சிறப்பு அடையலாம். அம்மா இப்பிள்ளையை இன்றே என்னிடம் ஒப்புவித்துவிடுங்கள். குறைந்தது

பத்து ஆண்டுகளாவது என்னிடம் இருக்கவேண்டும். பின்னர்ப் பாருங்கள்; தங்கள் பிள்ளை ஒரு புத்துயிர் பெற்று வருவான்.

*நற் :-* நல்லதம்மா! இவன் இன்றே தங்கள் அடைக்கலம். இவனைப்பற்றிய எல்லாப் பொறுப்பினையும் தங்களிடம் விட்டு விட்டேன். இனி என் பிள்ளையல்லன்; தங்கள் பிள்ளையே.

*செ :-* அதிற் றடையென்னை? என்பாற் பிள்ளையை விடும் அன்னையர் பின் தங்கள் பிள்ளைகளைப்பற்றிய கவலைகள் சிறிதும் அடைவதில்லை. பிள்ளைகளும் தங்கள் அன்னையரைச் சிறிதும் நாடுவதில்லை. அப்பா! கண்ணே! வருக! நாம் போய் வருவோம். அம்மணி! வணக்கம்.

(உ)

*நற் :-* அம்மா! வருக, வருக! நீண்ட காலமாயின, நீங்களும், என் அருமை மகனும் நலனுற்றிருப்பதை அவ்வப்போது தெரிந்து மகிழ்ந்தேன். உங்களை நேரிற் காணும்பேறு இன்றுதான் பெற்றேன். என் மகன் நலனுற்றிருக்கின்றனனா? உங்களுடன்? வந்திருக்கும் இப்பையன் யாரோ?

*செ :-* அம்மா! இப்பையன் யாரென்பது தெரிந்திலதா? இவனே உங்கள் அருமைச் செல்வன். நான் மிகு முயற்சிகொண்டு உங்கள் பையனை உருவத்தால் மட்டன்றிக் குணங்களானும் மிகவும் திருத்தியுள்ளேன். இவன் கல்லாத கலையில்லான். சுருங்கக் கூறின், இவன் உங்கள் பழைய பழக்க வழக்கங்களாய குடிலைவிட்டு மேனாட்டார் பழக்க வழக்கங்களாகிய புதிய மாளிகையில் குடிகொண்டுள்ளான் நீங்கள் நாளடைவில் உணர்ந்து என்னை என்றும் மறவாது வாழ்த்துவீர்கள். நான் நாளை வருகிறேன். வணக்கம்

*நற் :* அம்மா! அமர்க! எமது எளிய குடிலில் தங்கிப்போக வேண்டும் இவ்வெளிய காணிக்கையும் பெற்றருளல்வேண்டும்.

*செ ;* நல்லது, அங்ஙனமே செய்வேன்,

(ங.)

*நற் :* ஆ! இது என்ன ஏமாற்றம்! என் அருமைப் பிள்ளையின் நிலை இவ்வாறாகுமோ? யான் இப்பிள்ளைக்கு அணிந்திருந்த கடவுட்பற்று, தாய் நாட்டன்பு, தாய் மொழியன்பு முதலிய அணிகலன்களுள் ஒன்றும் காணேனே! என் அருமை

மகளின் உடைமைப் பொருள்களாகிய அன்பு, அடக்கம், ஒழுக்கம் முதலியவற்றுள் ஒன்றும் காணேனே! இவன் உருவ மாறுபாட்டை என்னென்பேன்! இவன் பழக்க வழக்க மாறுபாட்டை என்னென்பேன்! இடையறாது வாய் கொள்ளாது வரும் சுருட்டுப் புகையும், பிறவும் ஆகிய இச்செயல்களை இவன் எங்ஙனம் கற்றனனோ ! படிப்புநிலை தான் திருந்தியிருத்தலாகாதா! ஐயோ! ஐந்து வயதிலேயே தங்கு தடையின்றிப் பேசக்கற்றிருந்த தாய் மொழியில் இப்போது பேசுதற்குத் தன்னால் இயலாது என்கின்றனனே! ஆங்கிலம் படித்த வாழ்வுதான் என்னே! ஒரு கலையும் உருப்படியாக உணர்ந்திலனே! அதிற் சிறிது, இதிற் சிறிதாக ஆண்டுதோறும் கற்பதும், அவ்வாண்டின் இறுதியிலேயே மறப்பதுமாகி வாளா வளர்ந்து வந்தருக்கின்றனனே! பாழும் தொண்டிற்கே கல்வி கற்றிருப்பதாக நாணின்றிக் கூறுகின்றனனே! அந்தோ! எங்கள் அருமைச் செவிலி, இவன் தந்தை பாட்டன் முதலியோரை வளர்த்த செவிலி, தாய்மொழிச் செவிலி- அவ்வன்னையிடம் விட்டிருந்தால் இப்பத்தாண்டினுள் பெரும் புலவனாகியிருப்பனே! தாய்மொழி, தாய்நாடுகளின் தொண்டுகளிற் றலை சிறந்து விளங்குவானே! ........

பொன்புரை கடவுட் பற்றாம் பொற்பமர் கலனைக் காணேன்!
தன்பெரு நாட்டன் பாய தனிக்கல னதனைக் காணேன்!
மன்புகழ் மொழித்தாயன்பு, மற்றுயர் கலன்கள் காணேன்!
என்பெறும்? மயிருங் கொய்தே யிவ்வுருக் கண்டாள் அந்தோ!

பண்டுள அடக்கம், அன்பு, பண்பமர் ஒழுக்கம் யாவும்
விண்டன! வேர்கொண் டுற்ற மேவுதீப் பழக்கமெல்லாம்!
தொண்டது பிறர்க்குச் செய்யத் துளி, துளிக் கற்றதன்றிக்
கண்டன கலைகள் யாவோ? காலம் வீண் போயிற் றந்தோ!

அருமையெம் மொழித்தாய் தன்பால் ஆண்டுக ளினையதங்கின்
இருந்தன குணங்கள் ஓங்கும்! எழிற்குணம் பிறவுஞ்சேரும்
சுருங்கிய காலந்தன்னிற் சொற்கலை யாவும் தேரும்!
சிறந்திட மொழியும், நாடும் திருத்தொண்டு புரியு மன்றே!

இதழாசிரியர்

தமிழ்ப் பொழில், துணர் : க, மலர் : ரு, (குரோதன-ஆவணி) பக், 176-78 1925.

## தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

### தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Tamil Literature — உரு. 85/—
   — Prof. M. S. Purnalingam Pillai — U. S. $ 17

2. மொழி நூல்
   — மாகறல் கார்த்திகேய முதலியார் — உரு. 75/—

3. Tamil University Machine Translation System (TUMTS) — Rs. 75/— U. S. $ 15
   Co-authors : K. C. Chellamuthu K. Rangan
   K. Murugesan

4. A Study on the Thanjavur Art Plate — Rs. 60/—
   — Prof. P. Saravanavel — U. S. $ 12

5. நாமதீப நிகண்டு — உரு. 68/—
   — கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்

6. மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — உரு. 45/—
   — பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை

7. Indians in South Africa — Rs. 60/—
   — Prof. K. Nambi Arooran — U. S. $ 12

விற்பனைக் கழிவு :

| | | |
|---|---|---|
| | அஞ்சல் வழி | 25% |
| | நேரில் | 30% |
| | அஞ்சல் செலவு தனி | |
| | பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு | 40% |

விற்பனையாளர்களுக்குப் பெரும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001,

## பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர் க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட், பிஎச்.டி.
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ..
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2,

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

**Regd. No.**

நூல்-அஞ்சல்




பெறுநர்

7. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர் சரஸ்வதி
மகால் நூல் நிலைய இதழ்,
அரண்மனை,
தஞ்சாவூர்.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

**தமிழ்ப் பொழில் கட்டணம்**

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 50 | 3 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 30 00 | 60 00 |
| வாழ் நாள் கட்டணம் | ரூ. | 250 00 | 600 00 |


வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.